# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

VOLUME - 1 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 2
FEBRUARY 2017 TAMIL & MALAYALAM
ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=


*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*


0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com




கர்த்தருக்குள் அன்பான வாசக குடும்பங்களுக்கு.

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துகிறேன்.

கர்த்தர் எனக்கு பூரண சுகமும் பெலமும் கொடுத்தார். இதுவரை ஐந்து ஊர்களுக்கு பயணம் செய்து கர்த்தருடைய செய்தியை முன்புபோல் பல மணிநேரங்கள் கர்த்தருடைய செய்தியை பகிர்ந்துக்கொண்டேன். என் உடல் நலத்தைக்குறித்து **விசாரித்தவர்கள்,ஜெபித்தவர்கள்** அத்தனை பேர்களுக்கும் **நன்றி** கூறுகிறேன். என் **வைத்திய செலவுக்கென்று** சிலர் எனக்கு **பணம்** அனுப்பினார்கள். அவர்கள் என்மேல் காட்டிய அன்புக்காக, பரிவுக்காக தேவனைத் துதிக்கிறேன். எனக்கு வைத்தியம் செய்த Dr. பெனிட்டா சாமுவேல் M.D. அவர்கள் ஒரு பைசா கூட ஆஸ்பத்திரி செலவுக்கு பணம் கொடுக்க எங்களை அனுமதிக்கவில்லை. **ஊழியக்காரர்களை** தாங்குவதற்கென்று கர்த்தருடைய பிள்ளைகளை கர்த்தர் ஆங்காங்கு ஆயத்தபடுத்தியுள்ளார். அவருக்கே மகிமை உண்டாவதாக.

## லெந்துகால கன்வென்ஷன்கள்

ஒவ்வொரு வருடமும் லெந்து கால மாதங்களில் CSI, லூத்தரன் சபைகள் ஒவ்வொரு வாரமும் பல ஊழியர்களை அழைத்து கன்வென்ஷன் கூட்டங்களை நடத்துகிறார்கள். இது சபை மக்கள் தங்களை பரிசோதித்து வசனத்தின்படி சரிப்படுத்திக்கொள்ளவும், ஆவிக்குரிய ஜீவியத்தை புதுப்பித்துக்கொள்ளவும் உதவுகிறது.

இதில் **பிரச்சனை என்னவென்றால்** இந்த கூட்டங்களில் பிரசங்கிக்க **கள்ள உபதேசத்தை** பிரசங்கிக்கும் **ஊழியர்களையும்** அழைத்து அவர்களுடன் வசன அடிப்படையில் பிரசங்கிக்கும் **என்னையும்** அழைத்து கூட்ட ஏற்பாடுகளை செய்கிறார்கள். அரசியல் கூட்டங்களுக்கு பேச்சாளர்களின் புகைப்படங்களை வரிசையாக வெளியிடுவதைப்போல நோட்டீஸ்களிலும் வால்போஸ்ட், **பிளக்ஸ் போர்டுகளிலும்** பிழையான ஊழியக்காரர்கள் வரிசையில் பத்தோடு பதினொன்றாக **என் புகைப்படத்தையும்** வெளியிடுகிறார்கள். இதை காணும் உண்மை விசுவாசிகள் என்ன நினைப்பார்கள் ?

# பிப்ரவரி 2017

இப்படிப்பட்ட கூட்டங்களை நடத்தும் CSI லூத்தரன் சபை மக்கள், ஆயர்களின் ஆவிக்குரிய (Stand) நிலைபாடு என்ன?

**அபிஷேகம்** அக்கினி **அபிஷேகம் தூதர்களை** அழைப்பவர்கள், **பரலோகத்துக்கு** காலையும் மாலையும் சென்று வருகிறேன் என்று கூறும் **பொய்யர்களின்** கூட்டத்தில் என்னையும் அழைத்தால் மக்கள் என்ன நினைப்பார்கள்? இப்படி சபை மக்களை திருப்திப்படுத்தும் நோக்கத்தில் கார் விற்பனை செய்யும் சகோ. **ஸ்டீபன்,** ஜெபத்தில் பொய்யான பெயர்களை அழைக்கும் **மோகன் சி. லாசரஸ், பால் தினகரன்,** சகோ. ராபின்சன்,சகோ. சாம்ஜெபதுரை, எபினேசர் பால், அப்பாதுரை, அந்நியபாஷை பேசும் சகோதரி நளினி, சகோ.ஜான் சாலமோன், வின்செண்ட் செல்வகுமார் இவர்களைப்போல வசனத்தை விட்டுவிலகி பிரசங்கிப்பவர்கள் ஏராளம். இப்படிப்பட்டவர்களை அழைத்து கூட்டம் நடத்துபவர்கள் தயவுசெய்து **என்னை அழைக்காதீர்கள்.** நான் பணத்துக்காக பிரசங்கிப்பவன் அல்ல. **பொய்யான சாட்சிகளை** மேடைகளில் ஏற்றுவதும் இல்லை. அவைகளை என் பத்திரிகையில் வெளியிடுவதுமில்லை.

பொதுவாக ஒன்றை சொல்லிக்கொள்கிறேன். **கர்த்தர் என்னிடம்** இப்படி பேசினார், உங்களிடம் சொல்லும்படி **கர்த்தர் என்னிடம் பேசினார்** என்பவர்களை தயவுசெய்து அழைக்காதீர்கள்.

**வசனம் இப்படி கூறுகிறது, வசனத்தின்படி வாழுங்கள்** என்று பிரசங்கிப்பவர்களை மட்டும் அழையுங்கள் அப்போதுதான் உங்கள் சபை **வசனத்தில் வளரும்.** பொதுவாக **அன்னிய பாஷை** பேசுபவர்கள், சொப்பனம், **தரிசனம்,** கர்த்தர் **சொன்னார்** என்று கூறும் இப்படிப்பட்ட ஊழியர்களிடம் ஜாக்கிறதையாக இருங்கள். உங்களை நேசிப்பதால் இதை எழுதுகிறேன். மேலே குறிப்பிட்ட ஊழியர்களின் பெயர் குறிப்பிடாமல் எழுதினால் **உங்களுக்கு விளங்காது,** ஆகவே மாதிரிக்காகவே மேலே சில பெயர்களை குறிப்பிட்டேன்.

**நியாயதீர்ப்பு** நம் கையில் உள்ள **வேதபுத்தகத்தின்** அடிப்படையில்தான் **அமையும்** என்பதை ஞாபகப்படுத்துகிறேன். வசனத்தில் இல்லாத பிரமிக்ககூடிய விஷயம் தேவ தூதர்கள் வந்து கூறினாலும் நம்பவேண்டாம் என்று பவுல் நம்மை எச்சரித்திருக்கிறார்

- Onlineல் காணிக்கை நீங்கள் அனுப்பிய காணிக்கை யாவும் என் அக்கவுண்டில் வந்து சேர்ந்தது. பதில் எழுத முடியவில்லை.
- மற்ற M.O., Cheque, D.D. அனுப்பியவர்களுக்கு உடனுக்குடன் பதில் எழுதிவிட்டேன்.

கர்த்தருடைய கிருபை உங்களனைவரோடும் இருப்பதாக.

டாக்டர். **புஷ்பராஜ்**

## மூன்று நாட்கள் மட்டும் இலங்கை கூட்டங்கள்

2017 ஏப்ரல் மாதம் 6,7, 8 தேதிகள் மட்டும் **இலங்கை GALLE FACE** (கொளும்பு)வில் உள்ள **CHRIST CHURCH** ல் லெந்து நாட்களின் விசேஷ கூட்டங்களில் பேச அழைக்கப் பட்டுள்ளேன்

வேறு சபைகளுக்கோ இலங்கையின் வேறு ஊர்களுக்கோ பிரசங்கிக்க எனக்கு தேதிகள் அந்த மாதத்தில் இல்லாதபடியால் 3 நாட்கள் மட்டும் இலங்கைக்காக கொடுத்தேன்.

கொளும்பு கூட்ட விவரங்கள் அறியவும், **என்னை நேரில் கண்டு** கதைக்கவும், ஜெபிக்கவும் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்.

Fr. Charles Gnanaiah 94770756688, 94112422878
e-mail : fr.rdcg@hotmail.com/revrdcg@gmail.com

# வேத வசனங்களில் முரண்பாடுகள் இல்லை

குறிப்பு : கடந்த வருடம் ஜாமக்காரனில் Dr. M.S. **வசந்தகுமார்** அவர்கள் எழுதிய புஸ்தகத்திலிருந்து **அந்தி கிறிஸ்துவின் அடையாளங்கள்** என்ற ஒரு சிறு பகுதியை மட்டும் எடுத்து வெளியிட்டேன். அதை வாசித்த பலர் அவரின் மற்ற வெளியீடுகள் எங்கு கிடைக்கும் என்று எழுதி கேட்டார்கள். அதன் விவரங்களை இந்தியாவில் உள்ள கீழ்காணும் விலாசத்தில் தொடர்புகொண்டு கேட்டு வாங்கி பயனடையுங்கள்.

**The Bible Researsh Centre,**
2/161, Ayyanar Street, Gundur Burma Colony,
Airport (Via) Trichy- 62007, Tamilnadu
Phone : 9942193486 email: vrkbibleteach@yahoo.com

## *The Correct Verdict for the Contradiciting Verses*

Dr. M.S. VASANTHAKUMAR,
B.Teh., M.A., M.Phil., D.Mind

***முரண்பாடுகள் இல்லை*** No. 1

### ஆதியாகமம் 1:3-5 முதலாம் நாளில் தேவன் வெளிச்சத்தைப் படைத்தார்
### ஆதியாகமம் 1:14-19 நான்காம் நாளில் தேவன் சூரியனை படைத்தார்.

வேதாகமத்தில் முதல் புத்தகமான ஆதியாகமத்தின் முதலாம் அதிகாரத்தில் சுட்டிக்காட்டப்படும் **முதலாவது முரண்பாடு** வெளிச்சத்தின் சிருஷ்டிப்பை பற்றியதாகும்.ஆதியாகமம் 1:3-5ன்படி தேவன் **முதலாம் நாளிலேயே** வெளிச்சத்தை படைத்துள்ளார். ஆனால் இவ்வதிகாரத்தில் 14 முதல் 19 வரையிலான வசனங்களின்படி தேவன் **நான்காம் நாளிலேயே** சூரியனை படைத்துள்ளார். சூரியனிலிருந்தே நமக்கு வெளிச்சம் கிடைப்பதால், **சூரியன்** இல்லாமல் மூன்று நாட்கள் வெளிச்சம் இருந்ததாக கூறும் ஆதியாகமம் 1:3-5 வசனங்கள் சூரியனுடைய சிருஷ்டிப்பை **முரண்படுத்தும்** வேத பகுதியாக பலரால் கருதப்படுகிறது. அத்தோடு இது **விஞ்ஞான** ரீதியாக பிழையாக இருப்பதாகவும் வேத விமர்சகர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சில கிறிஸ்தவர்கள் தேவன் முதலாம் நாளே சூரியனை படைத்துவிட்டார் என்றும் நான்காம் நாளில் பூமியை சூழ்திருந்த **மேகங்கள் அகன்று வானம் தெளிவாகியதினால்** முதலாம் நாளில் சிருஷ்டிக்கப்பட்ட சூரியன் **நான்காம் நாளில்** நம் மானிட கண்களுக்கு தென்பட்டது என்றும், முதலாம் நாளில் வெளிச்சம் தராத நிலையில் சிருஷ்டிக்கப்பட்டிருந்த சூரியனுக்கு நான்காம் நாளில் ஏதோ நடைபெற்றதினால் அது பிரகாசிக்க கூடியதாக மாறியது என்றும் சுய விமர்சனம் செய்கின்றனர். அனால் ஏற்கனவே சிருஷ்டிக்கப்பட்ட சூரியன் நான்காம் நாளில் தென்பட்டது என்றோ அல்லது பிரகாசிக்க தொடங்கியது என்றோ ஆதியாகமம் 1:14-19ல் குறிப்பிடப்படவில்லை. **வானத்தில் சுடர்கள் அனைத்தும்** நான்காம் நாளில்தான் சிருஷ்டிக்கப்பட்டதாகவே இவ்வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. **மனிதருடைய அறிவுக்கு** ஏற்ற விதத்தில் வேதாகமத்தை **வியாக்கியானம்** செய்யும் இத்தகைய முறையை கிறிஸ்தவர்கள் பின்பற்றுவது தவறாகும்.

உண்மையில் ஆதியாகமம் 1:3-5ல். எழுதப்பட்டதுபோல் தேவன் முதலாம் நாளிலேயே **வெளிச்சத்தை படைத்துள்ளார்.** சகல உயிரினங்களும் உயிர் வாழ்வதற்கு **வெளிச்சம் மிக அவசியம்** என்பதனை அறிந்திருந்த தேவன் சகலவற்றையும் சிருஷ்டிப்பதற்கும் முன்பு **வெளிச்சத்தைத்தான்** படைத்துள்ளார், அனால் நான்காம் நாளில் சூரியனை சிருஷ்டித்த தேவன் தாம் ஏற்கனவே **முதல் நாளில்** உருவாக்கிய **வெளிச்சத்தை** சூரியனிலிருந்து வெளி வரும் விதத்தில் **அந்த வெளிச்சத்தை சூரியனில் வைத்துள்ளார்.** அதனால்தான் **சூரியன்** என்பதற்கு **மூல மொழியில்** உபயோகிக்கப்பட்ட சொல் ( தமிழில் **பெரியச்சுடர்** என்று குறிப்பிடப்பட்டுள்ளது.) ஒளி என்னும் அர்த்தம் உடையதாய் இராமல் **ஒளி தாங்கி** அதாவது **ஒளியை தாங்கிக்கொண்டிருக்கும் சுடர்** என்னும் அர்த்தம் உடையதாய் உள்ளது.

**சூரியன்** இல்லாத நிலையில் வெளிச்சம் இருக்க முடியாது என்று எண்ணுவது அர்த்தம் அற்றது. இத்தகைய அந்த நிலை பரலோகத்திலிருக்கும் என்பதை வெளிப்படுத்தல் 21:23 22:5 வசனங்களில் அறிய தருகின்றது. இவ்வசனங்களில் நரகத்திற்கு **வெளிச்சம் கொடுக்க சூரியனும் சந்திரனும்** அதற்கு **வேண்டுவதில்லை. தேவனுடைய மகிமையே** அதை **பிரகாசிப்பித்தது. ஆட்டுகுட்டியானவரே** அதற்கு **விளக்கு** என்றும் அங்கே இராக்காலமாயிராது. **விளக்கும் சூரியனுடைய** வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை. தேவனாகிய கர்த்தரே **அவர்கள்மேல் பிரகாசிப்பார்.** அவர்கள் சதா காலங்களிலும் அரசாளுவார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**தேவனே ஒளியாய்** இருப்பதானால் சூரியன் இல்லாத நிலையிலும் அவரால் வெளிச்சத்தை கொடுக்க முடியும். **அவரே வெளிச்சத்தின்** ஆரம்பமாக இருக்கின்றார். இதனால்தான் அவர் **ஒளியை வஸ்திரமாக** தரித்துக்கொண்டிருப்பதாக. சங்கீதகாரன் குறிப்பிட்டுள்ளான் (சங் 104:2) இஸ்ரவேல் மக்களுடைய வனாந்திர பிரயாணத்தில் **அக்கினி** ஸ்தம்பத்திலும் **ஆசரிப்பு** கூடாரத்திலும் தேவனுடைய பிரசன்னமே மக்களுக்கு ஒளியாக இருந்தது (யாத் 24:15-18) இதனால்தான் எதிர்காலத்தில் சூரியனிலும் சந்திரனிலும் இருந்து அல்ல, தேவனிலிருந்தே வெளிச்சம் கிடைக்கும் என்று **தீர்க்கதரிசிகள்** முன்னரிவித்துள்ளனர். (எசா 60:19-20, யோவே 2:30-31, சக. 14:7) எனவே சூரியன் இல்லாத நிலையிலேயே முதல்

நாளில் தேவன் ஒளியை சிருஷ்டித்துள்ளார். சூரியன் இல்லாத நிலையிலும் வெளிச்சம் இருக்கக்கூடியது **மின்னனின் ஒளி சூரியனிலிருந்து** வருவதல்ல. உண்மையில் சக்தி மிகு இலத்திரன்களினால் உருவாகும் "ஈத்திரன்" என்னும் அலைகளிலேயே ஒளி இருப்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். எனவே தேவன் முதல் நாளிலேயே இவ்விதமாக வெளிச்சத்தை உருவாக்கியுள்ளார். நான்காம் நாளில் இவ்வெளிச்சம் சூரியனிலிருந்து வரும்படி மாற்று ஏற்பாட்டை செய்துள்ளார். எனவே ஆதியாகமத்தின் **முதல் நாள்** சிருஷ்டிப்புக்கும் நான்காம் நாள் சிருஷ்டிப்புக்கும் இடையில் எவ்வித முரண்பாடும் **இல்லை.**

***முரண்பாடுகள் இல்லை*** No. 2

**ஆதியாகமம் 1:20, ஜலத்திலிருந்து பறவைகள்உருவாக்கப்பட்டுள்ளன.**
**ஆதியாகமம் 2:19 மண்ணினால் பறவைகள்உருவாக்கப்பட்டுள்ளன.**

ஆதியாகம புத்தகத்தின் முதல் இரு அதிகாரங்களுக்கும் இடையில் இருக்கும் **முரண்பாடாக** பலரால் சுட்டிக்காட்டப்படும் முக்கியமான ஒரு விஷயம் பறவைகளின் சிருஷ்டிப்பைப் பற்றியதாகும். ஆதியாகமம் 1:20ன்படி தேவன் பறவைகளை **ஜலத்திலிருந்து** சிருஷ்டித்துள்ளார். ஆனால் ஆதியாகமம் 2:19ல் அவைகளை தேவன் **மண்ணினால்** உருவாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் பறவைகளின் சிருஷ்டிப்பைப்பற்றி ஆதியாகமம் **முரண்பாடான** தகவல்களை கொண்டுள்ளதாக சிலரால் கருதப்படுகின்றது.

பறவைகளின் சிருஷ்டிப்பை பற்றிய **முரண்பாடு தமிழ் வேதாகமத்தில்** மாத்திரமே காணப்படுகின்றது. இதற்கு காரணம் நாம் தற்பொழுது உபயோகிக்கும் **தமிழ் வேதாகமத்தை** மொழிபெயர்த்தவர்கள் ஆதியாகமம் 1:20ல் **ஒரு வாக்கியத்தை தவறவிட்டுவிட்டனர்.** இதனாலேயே பறவைகளும் தண்ணீரிலிருந்து சிருஷ்டிக்கப்பட்டதாக இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் பின்பு தேவன் நீந்தும் **ஜீவ ஜந்துக்களும்** பூமியின்மேல் **வானம்** என்கிற ஆகாய விரிவிலேயே **பறக்கும் பறவைகளையும்** ஜலமானது திரளாய் ஜனிபிக்கக்கடவது என்றார் என்னும் வசனத்தில் **ஜலமானது திரளாய் ஜநிபிக்கக்கடவது** என்னும் வாக்கியம், **தமிழ் வேதத்தில் நீந்தும் ஜீவஜந்துக்களை** என்று அடுத்து வரவேண்டும். அதாவது "பின்பு தேவன்: நீந்தும் ஜீவிந்துக்களை" ஜலமானது திரளாய் ஜநிப்பிக்கக்கடவது என்று இவ்வசனம் ஆரம்பமாக வேண்டும். இதன்படி **நீர்வாழ் உயிரினங்களைத்** தேவன் **ஜலத்தில் உருவாக்கியுள்ளார்** என்பதை அறிந்துகொள்கிறோம்.

ஆதியாகமம் 1:20ன் இரண்டாவது வாக்கியத்தில் **"பறவைகள் பறந்து திரியக்கடவது"** என்னும் வாக்கியம் **தமிழ்வேதாகம மொழிபெயர்ப்பாளர்களினால் நம் தமிழ் வேதத்தில் குறிப்பிட** தவறவிடப்பட்டுள்ளது இவ்வாக்கியம். "பூமியின்மேல் வானம் என்கிற ஆகாயவிரிவிலே பறக்கும் பறவைகளையும் என்பதைத் தொடர்ந்து வரவேண்டும். இதன்படி இவ்வாக்கியம் "பூமியின்மேல் வானம் என்கிற ஆகாயவிரிவிலே பறக்கும் பறவைகள் பறந்து திரியக்கடவது" என்று எழுதி இருக்கவேண்டும். எனவே, பறவைகள் ஜலத்தில் உருவாக்கப்பட்டன என்பது வேதாகமம் போதிக்கும் விஷயம் அல்ல. இது தமிழ் வேதாகம மொழிபெயர்ப்பாளரகளினால் ஏற்படுத்தப்பட்ட தவறான கருத்தாகவே உள்ளது. தமிழ் வேதாகமத்தின் மொழிபெயர்ப்பு பற்றிய

மேல் விபரங்களுக்கு இதை எழுதிய ஆசிரியரின் புனித வேதாகமத்தின் புதுமை வரலாறு என்னும் நூலை வாங்கி வாசிக்கவும்.

ஆதியாகமம் 1:20ஐ நாம் சரியான விதத்தில் மொழிபெயர்த்தால், இவ்வசனம் "பின்பு தேவன்: நீந்தும் ஜீவஜந்துக்களை ஜலமானது திரளாய் ஜநிப்பிக்கக்கடவது. பூமியின்மேல் வானம் என்கிற ஆகாயவிரிவிலே பறக்கும் பறவைகள் பறந்து திரியக்கடவது என்றார்" என்று எழுதி இருக்கவேண்டும். தமிழ் வேதாமத்தின் புதிய **மொழிபெயர்ப்பிகளில்** இத்தவறு **திருத்தப்பட்டுள்ளது.** "மோனஹன" என்பவர் மொழிபெயர்த்த தமிழ் வேதாமத்தில் இவ்வசனம். "திரள்திரளான ஜீவஜந்துக்கள் தண்ணீரிலே பலுகுக, பூமியின்மேல் ஆகாய மண்டலமாகிய வானத்தின் கீழே பறவைகள் பறந்து திரியக்கடவதுதென்று கடவுள் சொன்னார்" என்றும் இலகு தமிழ் மொழிபெயர்ப்பில் "அதன்பின் இறைவன் தண்ணீரில் உயிரிணங்கள் பெருகட்டும். பூமிக்கு மேலாக ஆகாய வெளியெங்கும் பறவைகள் பறக்கட்டும் என்றார்" என்றும் இவ்வசனம் **மூலமொழிக்கு** ஏற்றவித்தில் மொழிபெயர்க்கபப்ட்டுள்ளது.

*முரண்பாடுகள் இல்லை* No. 3

**ஆதியாகமம் 1:27ல் ஆணும் பெண்ணும் ஒரே நேரத்தில் சிருஷ்டிக்கப்பட்டனர்.**
**ஆதியாகமம் 2:7, 21:22ல் ஆணும் பெண்ணும் ஒரே நேரத்தில் சிருஷ்டிக்கப்படவில்லை.**

ஆதியாகமப் புத்தகத்தில் **முதல் இரண்டு** அதிகாரங்களும் **ஒன்றையொன்று முரண்படுத்தும்** இரண்டு வித்தியாசமான சிருஷ்டிப்புக்கதைகள் என்னும் கருத்து அண்மைக் காலங்களில் கிறிஸ்தவர்கள் மத்தியில் பிரபலமடைந்துள்ளது. இதற்குக் காரணம், இரண்டு அதிகாரங்களிலும் சித்தரிக்கப்பட்டுள்ள சிருஷ்டிப்பு விவரணத்தில் சில வித்தியாசங்கள் இருப்பதேயாகும். உண்மையில் முதலாம் அதிகாரத்தின்படி, தேவன் ஆணையும் பெண்ணையும் **ஒரே நேரத்தில்** சிருஷ்டித்துள்ளார். (ஆதி 1:27) ஆனால் இரண்டாம் அதிகாரத்தில் இருவரது சிருஷ்டிப்புக்கும் இடையில் **கால இடைவெளி உள்ளது.** (ஆதி. 7:20-22) மேலும் ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தில் மரம், பறவைகள், மிருகங்கள் என்பன **மனிதன் சிருஷ்டிக்கப்படுவதற்கும் முன்பே** படைக்கப்பட்டுள்ளன. ஆனால் **இரண்டாம் அதிகாரத்தில்** மனிதன் **சிருஷ்டிக்கப்ட்ட பின்பே** இவையெல்லாம் உருவாக்கப்படடுள்ளன. (ஆதி 2:8-9, 19:20) இதனால் இரண்டு அதிகாரங்களும் ஒன்றையொன்று முரண்படுத்தும் வித்தியாசமான சிருஷ்டிப்புக் கதைகள் என்று பலர் எண்ணுகின்றனர்.

ஆதியாகமப் புத்தகத்தின் முதல் இரண்டு அதிகாரங்களையும் மேலோட்டமாக வாசிக்கும்போது. பல **முரண்பாடுகள்** இருப்பதாக நமக்குத் தென்படலாம். ஆனால் **முதலாம் அதிகாரத்தில்** ஆறு நாட்களிலும் தேவன் சிருஷ்டித்த சகலவற்றையும் குறிப்பிட்ட பின்னர் **இரண்டாம் அதிகாரத்தில்** மறுபடியுமாக சிருஷ்டிப்பைபற்றிய விஷயங்கள் எதற்காகக் எழுதப்பட்டுள்ளன என்பதை நாம் அறிந்திருந்தால், இவ்விரு அதிகாரங்களிலும் எவ்வித **முரண்பாடுகளும்** இல்லை என்பதைக் கண்டுகொள்வோம்.

உண்மையில் ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தில் ஆறு நாட்களாகத் தேவன் சிருஷ்டித்த காரியங்கள் அனைத்தும் அவற்றின் **காலக்கிரம ஒழுங்கு** முறையின்படி குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் **இரண்டாம் அதிகாரத்தில்** தேவன் சிருஷ்டித்த சகல காரியங்களும் எழுதப்படவில்லை. மேலும் முதலாம் அதிகாரத்தில் **எவைகள் சிருஷ்டிக்கப்பட்டன என்று மாத்திரமே** குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால், இரண்டாம் அதிகாரத்தில் உள்ள காரியங்கள் எவ்வாறு சிருஷ்டிக்கப்பட்டன என்னும் விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளன. இதற்கு காரணம், இரண்டு அதிகாரங்களும் **வித்தியாசமான நோக்கங்களுடன்** எழுதப்பட்டுள்ளதேயாகும்.

தேவன் சிருஷ்டித்த அனைத்தையும் **சுருக்கமாகக் குறிப்பிவதே** முதலாம் அதிகாரத்தின் **நோக்கமாயுள்ளது.** இதனால்தான் சிருஷ்டிப்பின் ஆறு நாட்களிலும் ஒவ்வொரு நாளும் தேவன் எவற்றையெல்லாம் சிருஷ்டித்தார் என்று ஒரு பட்டியலைப் போல குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இரண்டாம் அதிகாரம், தேவனுடைய சிருஷ்டிப்புகளில் ஒன்றான **மனிதனுடைய தோற்றத்தைப்பற்றிய** விவரணமாயுள்ளது. **மனிதனுக்கு முக்கியத்துவம்** கொடுத்துள்ள இரண்டாம் அதிகாரம் சிருஷ்டிப்பின் காலக்கிரம ஒழுங்கு முறையைக் கருத்திற்கொண்டு எழுதப்படவில்லை. இதனால் ஆதியாகமத்தின் முதலிரு அதிகாரங்களுக்கும் இடையில் முரண்பாடுகள் இருப்பதாகக் கூறுவது தவறு.

***முரண்பாடுகள் இல்லை*** No. 4

**ஆதியாகமம் 1:28 மானிட இனவிருத்தி தேவன் விரும்பும் ஆசீர்வாதமாயுள்ளது.**
**லேவியராகமம் 12:1-8 மானிட இனவிருத்தியைத் தேவன் பாவமாகக் கருதுகின்றார்.**

வேதாகம சத்தியங்களைச் சரியான விதத்தில் புரிந்துகொள்ளாதவர்கள் வேதாகமத்தில் சுட்டிக்காட்டும் முரண்பாடுகளில் ஒன்று. மானிட **இனவிருத்தியைப்** பற்றியதாகும். ஆதியாகமம் 1:28ல் ஆணும் பெண்ணுமாக மனிதனை சிருஷ்டித்த தேவன் அவர்களைப் பலுகிப் பெருகி பூமியை நிரப்பும்படியாக ஆசீர்வதித்தார். இதிலிருந்து மானிட இனவிருத்தி தேவனால் ஆசீர்வதிக்கப்படும் புனிதமான காரியமாக இருப்பதை அறிந்துகொள்கின்றோம். ஆனால் லேவியராகமம் 12:1-8ல் பிள்ளைப்பேற்றின்பின் தாய் ஆலயத்தில் செலுத்தவேண்டிய பலிகளைச் சுட்டிக்காட்டும் வேத விமர்சகர்கள் பிள்ளைப்பேறு **பாவமான செயலாக** இருப்பதனாலேயே அதற்காகப் பலிகள் செலுத்தவேண்டும் என்று தேவன் குறிப்பிட்டுள்ளதாக வாதிடுகின்றனர். இதனால் வேதாகமத்தின் ஒரு பகுதியில் தேவனுடைய **ஆசீர்வாதமாக** உள்ள பிள்ளைப்பேறு இன்னுமொரு பகுதியில் **பாவமான** செயலாக இருப்பதாகவும், இது வேதத்திலிருக்கும் மிகப்பெரிய **முரண்பாடு** என்றும் வேதவிமர்சகர்கள் கூறுகின்றனர்.

ஆதியாகமம் 1:28 அறியத்தருவது போல மானிட **இனவிருத்தி** தேவனுடைய **ஆசீர்வாதமாகவே** உள்ளது. லேவியராகமம் 26:9 உபாகமம் 28:11 சங்கீதம் 127:4, 128:1-3 போன்ற வசனங்களும் பிள்ளைப்பேற்றைத் **தேவனுடைய ஆசீர்வாதமாகவே** குறிப்பிட்டுள்ளன. இதேபோல, லேவியராகமம் 12:1-8ல் குறிப்பிடப்பட்டுள்ள பலிகளும் பிள்ளைப்பேற்றைப் **பாவமான செயல்களாக** குறிப்பிடவில்லை. உண்மையில் லேவியராகமம் 12:1-8ல் குறிப்பிடப்பட்டுள்ள பலிகள் எதற்கானவை என்பதை அறியாததினாலே இவ்வதிகாரம் பிள்ளைப்பேற்றைப் பாவமாக கருதுவதாக வேதவிமர்சகர்கள் கூறுவதற்கான காரணமாயுள்ளது.

லேவியராகமம் 12ம் அதிகாரத்தில் பிள்ளைப்பேறு **பாவம்** என்று குறிப்பிடப்படப்படவில்லை. இவ்வதிகாரத்தில் "உதிரச் சுத்திகரிப்பு" பற்றியே குறிப்பிடப்பட்டுள்ளது (லேவி 12:4-5,7) மாதவிலக்குக் காலத்தில் இருப்பதுபோலவே (லேவி 15:19) பிள்ளைப்பேற்றின்பின்னர் தாய் ஒருவார காலத்திற்கு தனித்திருக்கவேண்டும் என்று 2ம் வசனத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளதால் . பிள்ளைப் பேற்றின் போதும் அதன்பின்பும் ஏற்படும் **உதிரக் கசிவுகளே** தாயைத் தீட்டுப்படுத்துவதாக இவ்வதிகாரத்தில் குறிப்பிடப்பட்டள்ளது. எனினும் இங்கு "தீட்டு" "அசுத்தம்" என்னும் சொற்கள் பாவத்தை அல்ல சரீரப்பிரகாரமாகவும். சடங்காசார ரீதியாகவும் ஏற்படும் அசுத்தத்தையே குறிக்கின்றன."மானிட சரீரத்திலிருந்து வெளிவருபவை(அதாவது மலம்.சிறுநீர் என்பவை) சரீரத்தை அசுத்தமாக்குவது போலவே, **இரத்தமும்** சரீரத்தை அசுத்தமாக்குகிறது. இதனால் **உதிரபோக்கு** உள்ள நிலை அக்காலத்தில் சரீரப்பிகாரமாக அசுத்தமான நிலையாக இருந்தது. மேலும் மருத்துவத்துறை அக்காலத்தில் வளர்ச்சியடையாதிருந்ததினால் **உதிரப்போக்கு** வியாதிகள் பரவுவதற்கும் காரணமாக இருந்தது. இதனால் **தோல் வியாதிகள்** உள்ளவர்களுக்கும் **உதிரப்போக்குடன்** இருப்பவர்களும் மற்றவர்களுடன் சேர்ந்து இருப்பதைத் தவிர்ப்பதற்காகத் **தனிமைப்படுத்தப்பட்டனர்.** உண்மையில் இத்தகைய நிலையில் இருப்பவர்களே அக்காலத்தில் சடங்காசாரரீதியாக அவர்கள் **அசுத்தமானவர்களாகக்** கருத்தப்பட்டனர். இதனால் பிள்ளைப்பேற்றின் உதிரக்கசிவு முழுமையாக நிறுத்தப்பட்டு தாய் சரீரப்பிரகாரமாக ஆரோக்கியமடையும் வரை **ஆலய வழிபாடு** உட்பட பகிரங்க நிகழ்வுகள் எதிலும் பங்குபெற முடியாதவளாக இருப்பதற்காக, அவள் சடங்காசாரீதியாக **அசுத்தமானவளாகக்** கருதப்பட்டாள்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் சடங்காசாரரீதியாக **அசுத்தமாக** இருப்பவர்கள் தங்களுடைய சுத்திகரிப்பின் காலம்முடிவடைந்தபின்னர் ஆலயத்திற்குச் சென்று பலிகள் செலுத்தவது வழக்கம். லேவியராகமம் 12ம் அதிகாரத்தில் இத்தகைய **பலிகளைப்பற்றிய** அறிவுறுத்தல்களே கொடுக்கப்பட்டுள்ளன. எனினும் வேதாகம சத்தியத்தின்படி மனிதர் அனைவரும் **பிறவியிலேயே பாவிகளாக** இருப்பதனால் குறிப்பிட்ட சில காரியத்திற்காகப் பலிகள் செலுத்தப்படுவது வழக்கம். இதனாலயே சுத்திகரிப்புக்காகச் செலுத்தப்படும் பலியிலும் **பாவநிவர்த்திப் பலி** செலுத்டதப்படவேண்டியதைப் பற்றிய அறிவுறுத்தல் பழைய ஏற்பாட்டு வேதத்தில் உள்ளது. எனினும் இங்கு சர்வாங்க தகனபலிக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இதனால்தான் முதலில் இப்பலியைப்பற்றிய குறிப்பு எழுதப்பட்டுள்ளது. பாவத்திற்காகச் செலுத்தப்படும் பலிகளைப்பற்றிய அறிவுறுத்தல்களில் **பாவநிவாரண** பலியே முதலில் குறிப்பிடப்படும். ஆனால் லேவியராகமம் 12ம் அதிகாரத்தில் பாவநிவாரணப் பலியில்லை. சர்வாங்க தகனபலியே முதலில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் "புறாக்குஞ்சு அல்லது காட்டுப்புறா பாவ நிவர்த்திக்ககாகச் செலுப்படும்போது. அது சடங்காசாரச் சுத்திகரிப்புக்கான பலியாகவே இருந்தது" இதனாலேயே லேவியராகமம் 12ம் அதிகாரத்தில் பலிசெலுத்தப்படுவதனால் **தாயினுடைய பாவம்** மன்னிக்கப்படும் என்று குறிப்பிடாமல் " அப்பொழுது அவள் தன் **உதிர ஊறலின் தீட்டு** நீங்கிச் சுத்தமாவாள் " (லேவி.12:7-8) என்று கூறப்பட்டுள்ளது. செலுத்தப்படும்

பலி பாவத்திற்கானதாய் இருந்திருந்தால் லேவியராகமம் 4:20.26.31.35 ல் உள்ளவிதமாக "அப்பொழுது அது அவனுக்கு மன்னிக்கப்படும்" என்றே குறிப்பிடப்பட்டிருக்கும்.

***முரண்பாடுகள் இல்லை*** No. 5

**ஆதியாகமம் 1:31 - தேவன் சிருஷ்டித்தவைகள் அவருடைய பார்வைக்கு நல்லதாயிருந்தது.**
**ஆதியாகமம் 6:6 - தேவன் சிருஷ்டித்தவைகள் அவருடைய பார்வைக்கு விசனமாயிருந்தது.**

வேதாகமத்தில் தம்மை வெளிப்படுத்தியுள்ள தேவனுடைய தன்மையைப்பற்றி வேத விமர்சகர்கள் சுட்டிகாட்டும் முக்கியமான ஒரு **முரண்பாடு** அவருடைய மனநிலையைப் பற்றியதாகும். உலகத்தையும் அதில் உள்ளவைகள் அனைத்தையும் ஆறு நாட்களில் சிருஷ்டித்த தேவனுக்கு அவர் சிருஷ்டித்தவைகள" அனைத்தும் ஆரம்பத்தில் அவருடைய பார்வையில் **நல்லதாகவே** இருந்தன. இதனால் ஆதியாகமம் 1:31ல் "அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பாரத்தார். அது மிகவும் **நன்றாயிருந்தது"** என்று கூறுகிறது. ஆனால் இதை முரண்படுத்தும் விதத்தில் ஆதியாகமம் 6:6ல் "தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்குகாகக் கர்த்தர் **மனஸ்தாபப்பட்டார்.** அது அவர் இருதயத்துக்கு **விசனமாயிருந்தது"** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் தாம் சிருஷ்டித்தவைகளைப்பற்றிய தேவனுடைய மனப்பாங்கு **முரண்பாடுடையதாக** இருப்பதாக வேத விமர்சகர்கள் கூறுகின்றனர்".

வேதாகம வசனங்களை அவை **சொல்லப்பட்ட** அல்லது **எழுதப்பட்ட காலத்தைக்** கருத்திற்கொண்டே நாம் விளங்கிக்கொள்ளவேண்டும். இல்லையென்றால் அவைகள் முரண்பாடுடையவைகளாகவே நமக்கு தென்படும். ஆதியாகமம் 1:31ல் **மானிட பாவத்தினால் பாதிக்கப்படாத** உலகத்தை பார்த்தே தேவன். தாம் சிருஷ்டித்தவைகள் அனைத்தையும் **நல்லது** என்று கண்டார். ஆனால் ஆதியாகமம் 3ம் அதிகாரத்திற்குப் பின்னர் பாவத்தினால் பாதிக்கப்பட்டு, தேவனுடைய **சாபத்திற்கு** உட்பட்ட நிலையிலேயே உலக செயல்பாடு இருந்தது மனிதன் **பாவம் செய்ததினால்** தேவன் **மனிதனை** மட்டுமல்ல, அவன் வாழும் **பூமியையும் சபித்தார்.** ஆதி 3:17-19 5:29, ரோ. 8:20-22) எனவே ஆதியாகமம் 6ம் அதிகாரத்தில் **பாவத்தினால்** நிறைந்திருக்கும் அன்றைய உலகத்தைப்பார்த்தே தேவன் **மனஸ்தாப்பட்டார்.** தான் சிருஷ்டித்த மனிதரும் உலகமும் பாவத்தினால் பாதிக்கப்பட்டது அவருடைய மனதிற்கு **வேதனையளித்து** என்றே ஆதியாகமம் 6:6 கூறுகிறது. எனவே, இங்கு தேவனுடைய கூற்றுகளில் எவ்வித முரண்பாடுகளும் இல்லை. உண்மையில், மனிதனுடைய **நிலையிலேயே** மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆதியாகமம் 1:1ல் முழுமையான **பரிசுத்தத்துடன் இருந்த மனிதன்,** ஆதியாகமம் 3ம் அதிகாரத்தில் **பாவத்தில் விழுந்ததினால்.** அவன் பாவியாக இருப்பதைக்கண்டு கர்த்தர் **மனவருத்தமடைந்தததாக** ஆதியாகமம் 6ம் அதிகாரம் கூறுகிறது (ஆதி 6:5-6) "தேவன் சிருஷ்டித்தவைகள் அவருடைய பார்வையில் நல்லதாக இருந்தாலும். அவைகள் பாவத்தினால் பாதிக்கப்பட்ட பின்னர் அவருக்கு மனவருத்தத்தையே ஏற்படுத்தின".

ஆதியாகமம் 6:6ல் **மனஸ்தாபம்** என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட சொல்லைப் பழைய ஆங்கில வேதாகமம் **மனந்திரும்புதல்** என்று குறிப்பிட்டுள்ளதினால் இது "தேவன் மாறாதவர்"

(மல் 3:6, எண். 23:19, 1 சாமு 15:29) என்னும் வேதாகம சத்தியத்தை மறுதலிப்பதாக வேதவிமர்சகர்கள் கூறுவதற்கான காரணமாய் உள்ளது. எனினும் தேவனுடைய **மனஸ்தாபத்தை** (அல்லது மனந்திரும்புதலை) அவருடைய தன்மையில் ஏற்பட்ட மாற்றமாகத் கருதுவது தவறாகும். அவர் ஒருபோதும் மாறாத **நித்திய** தேவனாக இருக்கின்றார். ஆனால் **தேவனுடைய மாறாத தன்மை** மனிதர்களுடைய **மாற்றத்திற்கு ஏற்றவித்தில்** அவர்களுடன் செயல்படுவதையும் உள்ளடக்கியுள்ளது. அதாவது பாவியைத் **தண்டிப்பதும்** பாவி மனந்திரும்பும்போது அவனை **மன்னிப்பதும்** தேவனுடைய மாறாத தன்மையின் அம்சங்களாக உள்ளன. எரேமியா 18:7-10 தேவன் இதைப்பற்றி பின்வருமாறு தெரிவித்துள்ளார். "**பிடுங்குவேன்,** இடிப்பேன், **அழிப்பேன்** என்று நான் ஒரு ஜாதிக்கு விரோதமாகவும்,ஒரு ராஜ்யத்துக்கு விரோதமாகவும் சொன்ன மாத்திரத்தில் நான், விரோதமாய் பேசின அந்த ஜாதியார் தங்கள் **தீங்கைவிட்டுத் திரும்பினால்.** நானும் அவர்களுக்குச் செய்ய நினைத்த **தீங்கைச் செய்யாதபடிக்கு, மனம் மாறுவேன், கட்டுவேன், நாட்டுவேன்** என்றும் ஒரு ஜாதியையும் ஒரு ராஜ்யத்தையும் குறித்து **நான் சொல்லுகிறதுமுண்டு.** அவர்கள் **என் சத்தத்தைக்கேளாமல்,** என் பார்வைக்குப் **பொல்லாப்பானதைச்** செய்யாதபடிக்கு மனம் மாறுவேன்". இதனால் ஒருவனைத் தண்டிப்பதாக் கூறும் தேவன். அவன் மனந்திரும்பும்போது **தண்டியாமல்** இருப்பதானால், அவர் மாறாத தேவன் அல்ல என்று தர்க்கிப்பது அர்த்தமற்றது. உண்மையில் மாற்றம் தேவனில் அல்ல **மனிதனிலேயே** ஏற்பட்டுள்ளது. மாற்றமடையும் மனிதருடனான தேவனுடைய நடவடிக்கைகள் மனிதனில் ஏற்பட்ட மாற்றத்தை அடிப்படையாகக்கொணடே அவருடைய செயல்களும் அமைகிறது.

***முரண்பாடுகள் இல்லை*** No. 6

### ஆதியாகமம் 2:17 விலக்கப்பட்ட கனியைப் புசிக்கும் நாளில் ஆதாம் மரணமடைவான் என்று தேவன் கூறினார்.

### ஆதியாகமம் 5:5 விலக்கப்பட்ட கனியைப் புசித்த பின்பும் நீண்ட காலம் ஆதாம் (மொத்தம் 930 வருஷங்கள்) வாழ்ந்துள்ளான்

ஆதியாகமப் புத்தகத்தில் வேத விமர்சகர்கள் சுட்டிக்காட்டும் இன்னுமொரு முரண்பாடு, உலகின் முதல் மனிதனான ஆதாமின் மரணத்தைப்பற்றியது. ஆதியாகமம் 2:17ல் விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியைப் புசிக்கும் நாளில் அவன் மரணமடைவான் என்று தேவன் தெரிவித்திருந்தார். ஆனால் அவன் அக்கனியைப் புசித்தவுடன் மரணமடையாதது மாத்திரமல்ல. அவன் 930 வருஷங்கள் உயிருடன் வாழ்துள்ளான். இதனால் தேவனுடைய கூற்று, அதாவது விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியைப் புசிக்கும் நாளில் ஆதாம் **மரணமடைவான்** என்னும் எச்சரிக்கை **பெய்யானது** என்று வேதவிமர்சகர்கள் கூறுகின்றனர்.

அதியாகமம் 2:7லுள்ள தேவனுடைய கூற்றையும் ஆதாமினுடைய நீண்ட ஆயுளையும் முரண்பாடற்ற நிலையில் புரிந்துகொள்வதற்கு, வேதாகமத்தில் "**மரணம்**" என்னும் சொல் எத்தகைய அர்த்தங்களுடன் உபயோக்கிக்கப்பட்டுள்ளது என்பதை நாம் அறிந்திருக்கவேண்டும்.

உண்மையில், வேதாகமத்தில் **மரணம்** என்னும் சொல் மூன்று விதமான அர்த்தங்களுடன் உபயோகிக்கப்பட்டுள்ளது . ஒன்று **சரீர மரணம்,** இரண்டு **ஆவிக்குரிய மரணம்.** மூன்று **நித்திய மரணம்** மேலும் "யூதசிந்தனையில் மரணம் **பிரிவையே** குறிக்கிறது" இதன்படி மானிட சரீரத்தில் இருக்கும் ஆவியும் ஆத்துமாவும் சரீரத்தை விட்டு **பிரிந்து செல்வதே** சரீர மரணம் ஆகும். ஆனால் **ஆவிக்குரிய மரணம்** என்பது மனிதர் தேவனை விட்டுப் **பிரிவடைவதாகும்.** நித்திய மரணம் தேவனுடைய நிரந்தரப் பிரிவாகிய **நரக ஆக்கினையாக** உள்ளது.

உலகில் முதல் மனிதர்களான ஆதாமும் ஏவாளும் தேவனுடைய கட்டளையை மீறி, விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியைப் புசித்தபோது தேவன் எச்சரித்திருந்தபடியே அவர்கள் **ஆவிக்குரிய** பிரகாரமாக **மரணமடைந்தனர்.** அதாவது அவர்கள் ஆவிக்குரிய பிரகாரமாகத் தேவனைவிட்டுப் **பிரிவடைந்தார்கள்.** இதனால்தான் தேவன் அவர்களைச் சந்திக்க வந்தபோது அவர்களால் தேவனுடைய பிரசன்னத்தில் இருக்க முடியாதிருந்தது. அதுமட்டுமல்ல அதன்பின்னர் அவர்கள் தேவனுடைய பிரசன்னத்திற்கு வரமுடியாதபடி ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்தப்பட்டனர். **பாவம்** தேவனையும் மனிதனையும் **பிரிக்கின்றது.** என்பது வேதாகமம் போதிக்கும் பிரதான சத்தியமாகும் (ஏசா. 59:2) இதனால் தேவ கட்டளையைமீறிப் பாவம் செய்த ஆதாமும் ஏவாளும் அவருடைய பிரசன்னத்தில் இருக்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டனர். இத்தகைய **ஆவிக்குரிய மரணத்தைப்பற்றியே** தேவன் ஆதியாகமம ˙2:7ல் குறிப்பிடுள்ளார்.

***முரண்பாடுகள் இல்லை*** No. 7

**ஆதியாகமம் 4:17: காயீன் தன் மனைவியை (சகோதரியை) அறிந்தான். அவள் கர்ப்பவதியாகி ஏனோக்கை பெற்றாள்.**

**லேவியராகமம் 18:9: உன் தகப்பனுக்காவது உன் தாய்க்காவது வீட்டிலாகிலும் புறத்திலாகிலும் பிறந்த குமாரத்தியாகிய உன் சகோதரியை நிர்வாணமாக்கலாகாது**

ஆதியாகமப் புத்தகத்தை வாசிக்கும் அனைவரது உள்ளத்திலும் எழும் கேள்வி, உலகின் முதல் மனிதரான ஆதாமுக்கும் ஏவாளுக்கும் பிறந்த காயீன் யாரைத் திருமணமுடித்தான் ? என்பதாகும். ஏனெனில் உலகின் முதல் மனிதர். எனவே இவர்களுக்குப் பிறந்த பிள்ளைகள் மணமுடிப்பதற்கு . அவர்களுடைய சகோதர **சகோதரிகளைவிட உலகில் வேறு மனிதர்கள்** யாரும் இருக்கவில்லை. இதனால் காயீன் தன்னுடைய சகோதரியையே திருமணமுடித்திருக்கவேண்டும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. வேதாமத்தின் மொழி பெயர்ப்புகளில் இவ்விஷயம் நேரடியாகக் குறிப்பிடப்படாவிட்டாலும், **ஆதியாகமம்** எழுதப்பட்ட எபிரேய மொழியில் 4ம் அதிகாரம் 17ம் வசனத்திலுள்ள "காயீன் தன் மனைவியை அறிந்தான்" என்னும் வாக்கியத்தில் "மனைவி" என்பதற்கு உபயோகிக்கப்பட்டுள்ள " இஷ்ஹ்ஷாஹ்" (ishshah) என்னும் எபிரேய சொல் இதனை அறியத்தருகின்றது. ஏனெனில் இது வழமையாக மனைவியைக் குறிப்பிடுவதற்கு அம்மொழியில் உபயோகிக்கப்படும் சொல்அல்ல. இது **பெண்** (தமிழ் வேதாகம மொழிவழக்கில் **மனுஷி**) என்னும் அர்த்தமுடைய சொல்லாகும். இச்சொல்லே

ஆதியாகமம் 2:23ல் **மனுஷி** என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. எனவே "காயீன் ஒரு பெண்ணை அறிந்தான்" என்பதே ஆதியாகமம் 4:17ன் நேரடியான சரியான மொழிபெயர்ப்பாகும். ஆதியாகமத்தில் ஆதாம் ஏவாளின் முன்று ஆண் பிள்ளைகளுடைய பெயர்கள் மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் ஆதியாகமம் 5:4ல் **"ஆதாம் சேத்தைப் பெற்றபின்.** எண்ணூறு வருஷம் உயிரோடிருந்தது, **குமாரரையும் குமார்த்திகளையும்** பெற்றான்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே காயீன் ஒரு பெண்ணை அறிந்தான்" என்று கூறும்போது காயீன் தன்னுடைய காலத்தில் இருந்த பெண்களில் ஒருத்தியை அதாவது தன்னுடைய **சகோதரிகளில் ஒருத்தியை** மணமுடித்துள்ளான் .எபிரேய மொழிவழக்கில் அறிதல் என்னும் சொல் இவ்வசனத்தில் **பாலுறவுக்கான** இன்சொல்லணியாக உபயோகிக்கப்பட்டுள்ளது.

காயீன் தன் சகோதரியையே திருமணமுடித்தான் என்று அதியாகமம் 4:17ல் நேரடியாகவே (அதாவது மூலமொழி) குறிப்பிடப்பட்டிருப்பதானால். இது லேவியராகமம் 18:9ல் கொடுக்கப்பட்டுள்ள "உன் தகப்பனுக்காவது உன் தாய்க்காவது வீட்டிலாகிலும் புறத்திலாகிலும் பிறந்த குமாரத்தியாகிய **உன் சகோதரியை** நிர்வாணமாக்கலாகாது" என்னும் கட்டளையை முரண்படுத்தவதாக வேதவிமர்சகர்கள் கூறுகின்றனர். இவ்வசனத்தில் பாலுறவை தமிழ் வேதாமத்தில் **"நிர்வாணமாக்குதல்"** என்று குறிப்பிட்டுள்ளனர். இது ஆங்கிலத்தில் 1611ம் ஆண்டு வெளிவந்த ஜேம்ஸ் அரசனுடைய வேதாமத்தை ஆதாரமாகக் கொண்ட மொழிபெயர்ப்பாகும் .உண்மையில் மோசேயின் காலத்தில் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படும் வரை நெருங்கிய உறவினர்களுக்கிடையிலான ஆபிரகாமும் தன்னுடைய **சகோதரியையே** (ஒன்றுவிட்ட) திருமணமுடித்திருந்தான்.

வேதாகம சரித்தித்தில் மோசேயின் காலத்தில் இஸ்ரவேல் மக்களுக்கு நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன் உள்ள காலம் **மனசாட்சியின் காலம்** என்று அழைக்கப்படுகின்றது. அக்காலத்தில் மக்கள் தங்களுடைய **மனசாட்சியின்படி** வாழ்வதற்குத் தேவன் அனுமதித்திருந்தார். இதனால் நெருங்கிய உறவினருடைய திருமணமும் பலதாரணமும் அக்காலத்தில் இருந்ததது. அக்காலத்தில் மனிதர்கள் தங்களுடைய மனசாட்சியின்படி நன்மையையும் தீமையையும் அறிந்து வாழ்கின்ற விதத்தில் தேவன் தம்முடைய பிரமாணங்களை மனிதர்களுடைய **உள்ளத்தில்** எழுதிவைத்திருந்தார். (ரோ. 2:14-15) இதனால் தேவன் அக்காலதில் "சகல ஜனங்களையும் தங்கள் வழிகளிலே நடக்கவிட்டிருந்ததோடு (அப் 14:16) அவர்களுடைய பாவங்களை **அவர் பொருட்படுத்தவும்** இல்லை. (அப் 17:30) எனவே நீயாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னுள்ள கால மக்களுடைய வாழ்க்கை வரலாற்றைத் தேவனுடைய இத்தகைய செயல்முறையை, அதாவது அவர்களுடைய பாவங்கள் பொருட்படுத்தப்படாதமல் விடப்பட்டிருந்ததைக் கருத்திற்கொண்டவர்களாளவே வைத்து **அக்கால மக்களுடைய வாழ்க்கைமுறையை** நாம் குற்றப்படுத்தக்கூடாது. ஏனெனில் **நியாயப் பிரமாணம் இல்லாத காலத்தில்** மனிதர்களை பாவம் என்றால் என்ன என்பதை அறியாதவர்களாகவே இருந்தனர். (ரோ. 7:7)

*முரண்பாடுகள் இல்லை* No. 8

**ஆதியாகமம் 7:17 - ஜலப்பிரளயம் நாற்பது நாள் பூமியின்மேல் உண்டானது**

**ஆதியாகமம்7:24-ஜலம் பூமியின்மேல் நூற்றைம்பது நாள் பிரவாகித்துக் கொண்டிருந்தது.**

நேவாவின் காலத்தில் ஜலப்பிரளயத்தினால் முழு உலகமும் அழிகக்ப்பட்ட சம்பவத்தை நிஜமாக நடைபெற்ற ஒரு நிகழ்வாக ஏற்றுக்கொள்ளாதவர்கள், வேதாமத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் இச்சம்பவத்திலும் முரண்பாடுகள் இருப்பதாகக் கூறுகின்றனர். இச்சம்பவத்தில் சுட்டிக்காட்டப்படும் முக்கியமான முரண்பாடு அக்காலத்தில் எத்தனை நாட்களுக்கு ஜலப்பிரளயம் இருந்தது என்பதைப் பற்றியதாகும். ஏனெனில் ஆதியாகமம் 7:17ல் "ஜலப்பிரளயம் நாற்பது நாள் பூமியின் மேல் உண்டானது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் ஆதியாகமம் 7:24ன்படி "ஜலம் பூமியின்மேல் நூற்றைம்பது நாள் பிரவாகித்துக்கொண்டிருந்தது". இதனால் உண்மையில் எத்தனை நாட்களுக்கு ஜலப்பிரளயம் பூமியில் இருந்தது என்பதை சரியான விதத்தில் சொல்லாத இச்சம்பவம் முரண்பாடுடையதாக மாத்திரமல்ல, ஒரு கற்பனைக் கதையாகவும் வேத விமர்சகர்களினால் கருதப்படுகின்றது.

நோவாவின் காலத்தில் ஏற்பட்ட ஜலப்பிரளய சம்பவத்தில் முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டுபவர்கள், இச்சம்பவத்தை கவனித்து வாசிக்காதவர்களாகவே உள்ளனர். ஜலப்பிரளயம் ஏற்படுவதற்கும் ஏழு நாட்களுக்கு முன்பு தேவன் நோவாவிடம். நாற்பது நாட்கள் பூமியில் மழை பெய்யும்" என்று தெரிவித்திருந்தார் (ஆதி 7:4) தேவன் சொல்லியிருந்தபடியே "நாற்பது நாள் இரவும் பகலும் பூமியின்மேல் பெருமழை பெய்தது" என்று 12ம் வசனம் கூறுகிறது. அந்த நாற்பது நாட்களும் பூமியில் ஜலப்பிரளயம் ஏற்பட்டது என்றே 17ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டள்ளது. நாற்பது நாட்களாக பெய்த மழையினால் ஏற்பட்ட ஜலப்பிரளயத்தினால் பூமியில் 150 நாட்களுக்குத் தண்ணீர் பிரவாகித்துக் கொண்டிருந்தது எனபதையே 28ம் வசனம் அறியத்ததருகிறது. எனவே இச்சம்பவத்தில் எவ்வித முரண்பாடுகளும் இல்லை. நாற்பது நாட்கள் பெய்த மழையில் ஏற்பட்ட பிரளயம் 150 நாட்கள் இருந்தது. 150 நாட்களுக்குப் பின்னர் ஜலம் வடிந்தது என்று 8ம் அதிகாரம் 3ம் வசனத்தில் குறிப்பிடபட்டுள்ளது.

*முரண்பாடுகள் இல்லை* No. 9

**ஆதியாகமம் 10:5, 20,31 - பாபேல் கோபுர சம்பவத்திற்கு முன் உலகில் பல மொழிகள் இருந்தன**

**ஆதியாகமம் 11:1 - பாபேல் கோபுர சம்பவத்துக்கு முன் உலகில் ஒரேயொரு மொழி மாத்திரமே இருந்தது**

ஆதியாகமப் புத்தகத்தில் அநேகர் சுட்டிக்காட்டும் முக்கியமான முரண்பாடுகளில் ஒன்று மானிட மொழிகளைப் பற்றியதாகும். ஆதியாகமம் 10ம் அதிகாரத்தில் உலகில் பல மொழிகள் இருந்ததாக மூன்று தடவைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஆதி 10:5. 10:20. 10:31) ஆனால் அடுத்த

அதிகாரம் இதை முரண்படுத்தும் விதத்தில் உலகெங்கும் ஒரேயொருமொழியே அதுவரையில் இருந்தாகக் கூறுவதோடு இவ்வதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவமே உலகில் பல மொழிகள் உருவாகுவதற்கான காரணம் என்பதையும் அறியத்தருகின்றது (ஆதி 11:1, 11:6, 11:9) இதனால் இவ்விரு அதிகாரங்களும் ஒன்றையொன்று முரண்படுத்துவதாக வேத விமர்சகர்கள் கூறுகின்றனர்.

ஆதியாமம் 10ம் 11ம் அதிகாரங்களில் உள்ள முரண்பாட்டை விளக்கும் சில வேத ஆராச்சியாளர்கள் அக்காலத்தில் ஒவ்வொரு ஜாதியினருக்கும் தனியான மொழிகள் இருந்தததாகவும் அதே சமயம் தற்காலத்தில் ஆங்கிலம் உலகலாவிய சர்வதேச மொழியாக இருப்பது போல அக்காலத்தில் ஒரு உலகலாவிய சர்வதேச மொழி இருந்ததென்றும் கூறுகின்றனர். இதன்படி ஆதியாகமம் 10ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது ஜாதிகளின் சொந்த மொழிகள் என்றும் 11ம் அதிகாரத்தில் தேவனால் தாறுமாறக்கப்பட்டது. அக்காலத்தில் இருந்த சர்வதேச மொழி என்றும் விளக்கப்படுகின்றது. ஆனால் இத்தைய விளக்கத்திற்கு பொதுமான ஆதாரங்கள் எதுவும் இல்லை. ஒரு மொழியிலிருந்தே ஏனைய மொழிகள் தோன்றின என்பதை தற்கால அராய்ச்சிகள் அறியதருவதானால்ஆரம்பத்தில் பல மொழிகள் இருந்தன என்னும் விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. ஆதியாகமம் 11ம் அதிகாரம் அறியதருவதைப்போல மனிதர்கள் பாபேல் என்னும கோபுரத்தைகட்டுவதற்கு முன்னர் உலகெங்கும் ஒரே ஒரு மொழி மாத்திரமே இருந்தது. (ஆதி 11:1)

உண்மையில் 10ம் 11ம் அதிகாரங்கள் காலக்கிரம ஒழுங்கு முறையில் எழுதப்படவில்லை. அதாவது 10ம் அதிகார சம்பவங்கள் நடைபெற்ற பின்னால் 11ம் அதிகார சம்பவங்கள் நடைபெறும் விதத்தில் இவ்வதிகாரங்கள் எழுதப்படவீல்லை மேலும் 10ம் அதிகாரமும் ஆரம்பத்திலிருந்தே கடைசி வரை காலகிரம ஒழுங்குமுறையில் இல்லை/ இவ்வதிகாரம் மூன்று பகுதிகளாக உள்ளதோட ( 10:2-5, 10: 6-20 , 10:21-32) ஒரு பகுதி முடிவடையும் காலத்திலிருந்து அடுத்தபகுதி ஆரம்பமாகாமல் முதல் பகுதி எக்காலத்தில் ஆரம்பமானதோ அக்காலத்திற்கு மறுபடியுமாக செல்கின்றது. ஏனெனில் ஜலப்பிரளத்தின் பின்னர் நோவாவின் வம்சம் எவ்வாறு விருத்தியடைந்தது என்பதை அறியத்தரும் அவனுடைய மூன்று பிள்ளைகளின் வம்ச வரலாற்று அட்டவனைகளே இவ்வதிகாரத்தில் உள்ளன. (ஆதி. 10:1-2, 10:6, 10:21) இதனால் ஒவ்வொரு அட்டவனையும் ஒரே காலத்திலேயே அதாவது நோவாவின் மூன்று பிள்ளைகளான சேம், காம், யாபேத் என்போருடைய காலத்திலேயே ஆரம்பமாகின்றன. இவ்வட்வனைகளின்படி ஜலப்பிரளயத்தின் பின்னர் நோவினுடைய மூன்று பிள்ளைகளின் வம்சத்தினர் உலகின் பல பகுதிகளிலும் குடியேறியதோடு வித்தியசமான மொழிகளை பேசுகிறவர்களாகவும் இருந்தனர். (ஆதி 10:5, 10:20, 10: 32)

10ம்அதிகாரத்தில் நோவாவின் பிள்ளைகளுடைய வம்சத்தினர் மூலமாக மக்கள் தனித்தனி இனங்களாகவும் வெவ்வேறு மொழிகளை பேசுகறவர்களாகவும் உலகின் பல பாகங்களிலும் வாழுகிறவர்களாகவும் இருந்ததை அறியதந்த ஆதியாகம ஆசிரியர் 11ம் அதிகாரத்தில் ஒரு இடத்தில் வாழ்ந்த மக்கள் எவ்வாறு வெவ்வேறு இடங்களுக்கு சென்றனர்

என்பதையும் எவ்விதமாக பல மொழிகள் உருவாகின என்பதையும் விளக்கியுள்ளார். உண்மையில் 10ம் அதிகாரம், 5ம், 20ம் 32ம் வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகள் எவ்வாறு ஏற்பட்டன என்பதையே 11ம் அதிகாரத்தின் முதல் 9ம் வசனங்களும் அறிய தருகின்றன. 10ம் அதிகாரத்தை வாசிப்பவர்கள் உடைய உள்ளத்தில் எழும் கேள்விகளுக்கான பதிலாகவே 11ம் அதிகாரம் உள்ளது. அதாவது ஓர் இடத்தில் வாழ்ந்த நோவாவின் பிள்ளைகளுடைய வம்சத்தினர் ஏன் வேறு இடங்களுக்கு சென்றனர்? ஒரு மொழியை பேசியவர்கள் எவ்வாறு பல மொழிகளை பேச தொடங்கினார்கள் என்னும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதத்தில் 11ம் அதிகாரம் எழுதப்பட்டுள்ளது. இதனால் இவ்வதிகாரம் 10ம் அதிகாரத்தை எவ்விதத்திலும் முரண்படுத்தப்படவில்லை.

***முரண்பாடுகள் இல்லை*** No. 10

**ஆதியாகமம் 25:1-கேத்தூராள் என்பவள் ஆபிரகாமின் மனைவி**

**1 நாளாகமம் 1:32 - கேத்தூராள் என்பவள் ஆபிரகாமின் மறுமனையாட்டி**

வேத விமர்சகர்களின் பார்வையில் தென்பட்டுள்ள இன்னுமொரு வேதாகம முரண்பாடு கேத்தூராள் என்னும் பெண்ணை பற்றியது ஆதியாகமம் 25:1ல் இவள் ஆபிரகாமின் மனைவியாக இருக்கின்றாள் ஆனால் 1 நாளா 1:32ல் இவள் ஆபிரகாமின் மறு மணையாட்டியாக குறிப்பிடப்பட்டுள்ளாள். இதனால் வேதாகமத்தில் கேத்தூராள் என்னும் பெண்ணுக்கும் ஆபிரகாமுக்கும் இடையிலான உறவி முறையில் முரண்பாடு உள்ளதாக வேத விமர்சகர்கள் கூறுகின்றனர்.

வேத விமர்சகர்கள் கூறுகின்ற விதமாக ஆபிரமாமுக்கும் கேத்தூராளுக்கும் இடையிலான உறவு முறையில் எவ்வித முரண்பாடுகளும் இல்லை. நாளாமகம் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி கேத்தூராள் ஆபிரகாமின் மறுமனையாட்டியாகவே இருந்தாள். ஆதியாகமம் 25:6ல் இவளும் ஆகாரும் ஆபிரகாமின் மறு மனையாட்டிகள் என்றே குறிப்பிடப்பட்டுள்ளனர். ஆனால் சாராளுடைய மரணத்தின ்பின்னர் அதுவரை காலமும் மறுமனையாட்டியாகஇருந்த கேத்தூராளை ஆபிரகாம் மணமுடித்துள்ளான். இதனால்தான் சாராளின் மரணத்தின் பின்னர் ஆதியாகமம் 25:1ல் ஆபிரகாம் கேத்தூராள் என்னும் பேர்கொண்ட ஒரு ஸ்திரியையும் விவாகம் பண்ணியிருந்தான் என குறிப்பிடப்பட்டிருந்தது.

சில வேத ஆராய்ச்சியாளர்கள் சாராள் உயிரோடு இருக்கும் காலத்திலேயே ஆபிரகாம் கேத்தூராளை விவாகம் பண்ணியிருக்கவேண்டும் என்று கருதுகின்றனர். ஈசாக்கு பிறப்பதற்கு முன்னே ஆபிரகாம் வயது முதிர்ந்தவனாகவும் தாம்பத்திய உறவில் ஈடுபட முடியாதவனாகவும இருந்ததினால் (ரோமா 5:19) சாரளுடைய மரணத்தின் பின்னர் அவன் கேத்தூராளை மணமுடித்து 6 பிள்ளைகளை பெற்றிருக்கமுடியாது (ஆதி 25:2) எனவே சாராள் உயிரோடிருந்த காலத்திலேயே கேத்தூராள் ஆபிரகாமின் மறுமனையாட்டியாக இருந்திருக்க வேண்டும். இதனால்தான் 1 நாளா 1:32ல் இவள் ஆபிரகாமின் மறுமனையாட்டி என்று குறிப்பிடப்பட்டுள்ளாள். ஆனால் சாராளின் மரணத்தின் பின் தனித்து விடப்பட்ட ஆபிரகாம் ஆதியாகமம் 25:1 அறியத்தருவது போல இவளை விவாகம் பண்ணியுள்ளான்.

*மறுபதிப்பு...*

# SHALOM FAMILY ENRICHMENT MISSION

மேலே காணப்படும் ஷாலோம் என்ற யெரில் ஒரு இயக்கம் சென்னையில் உள்ள குடும்பங்களை சந்தித்து ஜெபகுழுக்களை உருவாக்குகிறது. சென்னையில் **சமாதானமில்லாத குடும்பம்,உடைந்த குடும்பம்** இவர்களுக்கு ஆலோசனையும் கொடுத்து அவர்களை அடிக்கடி சந்தித்து அவர்களை **வசனத்தில்** வழி நடத்துகிறார்கள். அப்படியே **புற மதஸ்தவர்களுக்கு** அவர்கள் வீடுகளை சந்தித்து அவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கிறார்கள். இதை முழுநேர பணியாகவே செய்கிறார்கள்.

சிறுவர் ஊழியத்துக்கு (Scripture Union) பொருப்பு வகித்து ஊழியம் செய்த சகோதரர் **ராஜாசிங்** அவர்கள் சில குடும்பங்களுடன் இணைந்து இந்த குடும்ப கூடுகையை சில ஆண்டுகளாக செய்து வருகிறார்கள்.

அப்படி சந்திக்கப்பட்டு இயேசுவை ஏற்றுக்கொண்ட குடும்பங்களை வருடத்துக்கு ஒருமுறை ஒரு இடத்தில் கூட்டிச்சேர்த்து அவர்களுக்கு **வேத பாடமும்** நடத்தி ஒரு நாள் முழுவதும் ஒரவருக்கொருவர் ஆவிக்குரிய ஜீவியத்தை குறித்து பகிர்ந்துகொள்ளும் ஏற்பாட்டை சிறப்பாக செய்து வருகிறார். அப்படிப்பட்ட ஒருநாள் கூடுகை 2016 அக்டோபர் மாதம் 30ம் தேதி சென்னை (சேத்துபட்டு) கிறிஸ்தவ கல்லூரியில் (M.M.C.) நடத்தினார்கள். அதில் ஒரு நாள் முழுவதும் கர்த்தருடைய வசனத்தை பகிர்ந்துகொள்ள என்னை (Dr. புஷ்பராஜ்) அழைத்து சிறப்பு ஏற்பாட்டை நடத்தினர். அதில் **கேள்வி-பதில்** பகுதி சிறப்பாக அமைந்தது. அதில் குடும்ப பிரச்சனைகளும் அலசப்பட்டது. கர்த்தர் இப்படிப்பட்ட குடும்ப கூடுகையை ஆசீர்வதித்கிறார்.

சென்னையில் உள்ளகுடும்பங்களை நேரில் சந்திக்கும் ஊழியம் யாரும் செய்யாதது ஆகும். அதை **சகோ.ராஜாசிங்** அவர்களும்,அவர் **மனைவியும்** இணைந்து இந்த ஊழியத்தை செய்து வருகிறார்கள். கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது. சென்னையில் உள்ள குடும்பங்கள் இவர்களை அழைத்து தங்கள் வீடுகளிலும் இப்படிப்பட்ட ஜெப கூடுகையை நடத்த விரும்பினால் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண். **சகோ. ராஜாசிங்** 938272089 (சென்னை) என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

குறிப்பு : சகோ. ராஜாசிங் அவர்களோடு தொடர்பு கொளள் பலர் என்னிடம் அவருடைய தொலைபேசி எண்ணை என்னிடம் கேட்டார்கள். பிறகுதான் டிசம்பர் மாத ஜாமக்காரனில் சகோ. ராஜாசிங் அவர்களின் தொலைபேசி எண்ணில் கடைசி நெம்பர் விடுபட்டுபோனதை அறிந்தேன். ஆகவே மறுபடியும் சரியான தொலைபேசி எண்ணை இப்போது குறிப்பிடுவதற்காகவே டிசம்பர் செய்தியை மறுபடியும் வெளியிடுகிறேன்.

சகோ. **ராஜாசிங்** (சென்னை) **9382720809**

# விமர்சனம் - திருத்தம்

**மஹாராஜன் வேத மாணிக்கதேசிகர்** வேறு - **வேத மாணிக்கம் என்பவர்** வேறு

ஜனவரி 2017 ஜாமக்காரனில் 18ம் பக்கத்தில் வேத மாணிக்க தேசிகர் என்பவரைப்பற்றி நீங்கள் எழுதிய கட்டுரைக்கு நன்றி.

உங்கள் கட்டுரையில் எழுதப்பட்ட **சருவலோகாதிபா நமஸ்காரம்** என்ற பாடல் உட்பட நம் CSI கீர்த்தனைகளில் உள்ள மற்ற 3 பாடல்களும் கன்னியாகுமரி மாவட்டம் கல்லுக்கூட்டம் என்ற இடத்தை சேர்ந்த Rev. ம. வேதமாணிக்கம் (மதுர நாயகம், வேத மாணிக்கம்) என்பவர் இயற்றியதாகும். நம் கீர்த்தனையில் இடம் பெறாத வேறு 16 வாலிப எழுச்சி பாடல்களையும் இவர் இயற்றியுள்ளார்.

காலத்தால் மிகப்பிந்திய ம. வேத மாணிக்கம் வரலாற்று ஆண்டுகளும் மகராஜன் வேத மாணிக்கம் அவர்களின் ஆண்டுகளும் கலந்து கலந்து வருகின்றன.

1864-ல் பிறந்து 1917ல் காலமானவர் ம. வேத மாணிக்கம் 1806ல் மயிலாடி வந்து 1816ல் திரும்பிய மிஷனரி **றிங்கல் தொபேயோடு** மா. வேத மாணிக்கம் அவர்கள் சேர்ந்து ஊழியம் செய்ய வாய்ப்பில்லை. அதுபோல 1817ல் வந்த இரண்டாவது மிஷனரியான **Rev. சார்லஸ் மீட்** அவர்களோடு இவர் ஊழியம் செய்யும் வாய்ப்பும் இல்லை.

மகாராசன் வேத மாணிக்கத்தின் மனைவியின் தங்கையின் வீடு( கன்னியகுமரி மாவட்டம்) **மார்த்தாண்டம்** என்பதும் பிழையான தகவல்ஆகும்.

இரண்டு நபர்களும் வேறு என்று அறியாத யாரோ ஒருவர் உங்களுக்கு தவறான தகவலை அனுப்பியுள்ளார்கள் என்று எண்ணுகிறேன். ஏறத்தாழ நூற்றாண்டு பிந்தி வாழ்ந்து சருவலோகாதியா ஆ. இன்பகாலமல்லோ, ஜீவவசனம் கூறுவோம் எனத் தொடங்கும் பாடல்களை இயற்றிய ம. வேத மாணிக்கத்தின் வரலாற்றில் ஒரு பகுதியையும் 1799ல் சிதம்பரம் என்ற ஊருக்கு சென்றும் மெய்த்தேவனைத் தரிசிக்க இயலாமல் அங்கிருந்து துரத்தப்பட்டு. தஞ்சை சென்று Rev. கோலாFப் மூலமாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட **மகராசன் வேத மாணிக்கம்** அவர்களின் வரலாற்றையும் ஒன்றாகப்போட்டு குழப்பி விடாதீர்கள்

**கல்லுகூட்டம் என்ற ஊரில் உள்ள CSI சபையின் 125ம் ஆண்டு மலர் 89ஐ இத்துடன் அனுப்பியுள்ளேன்.**

# Bio Data of First Pastor

| | | |
|---|---|---|
| பெயர் | : | **அருள்திரு.M.வேதமாணிக்கம்** (Late)<br>s/o மதுரநாயகம் & தேவாயா<br>வேம்படிவிளை. கல்லுக்கூட்டம் |
| மனைவி பெயர் | : | **ராகேல்**<br>பிச்சன்விளை, மத்திகோடு |
| சகோதரர்கள் | : | திரு. தேவதாசன் உபதேசியார்<br>திரு. பரமானந்தன் ஆசிரியர் |
| சகோதரிகள் | : | ஞானப்பூவு |
| பிறந்ததேதி | : | 1864 |
| இறந்த தேதி | : | 10-05-1917<br>வயது 53 (ஐம்பத்தி மூன்று) |
| பிறந்த இடம் | : | வேம்படிவிளை |
| இறந்த இடம் | : | வேம்படிவிளை |
| வகித்த பதவிகள் | : | School Inspector L.M.S., நெய்யூர்<br>Church Pastor L.M.S., கல்லுக்கூட்டம்<br>School Founder L.M.S., கல்லுக்கூட்டம்<br>Village Chieftain., கல்லுக்கூட்டம் |
| பிள்ளைகள் | | |
| மகன்கள் | : | 1) தேவசிகாமணி<br>2) ஞான சிரோமணி } இவர்கள் மூன்று பேரும் ஆசிரியை பணியை செய்தவர்கள் அதோடு ஆத்மிக முறையில் முன்னேறியவர்கள்<br>3) செல்வமணி |
| மகள்கள் | : | 1) ஞான தீபம்<br>2) தங்கம்மாள்<br>3) ராஜம்மாள் |

1) இவர் வேத போதக பணியில் பல கிறிஸ்தவ பாடல்கள் இயற்றியுள்ளார். குறிப்பாக "சர்வ லோக ஆதிபா நமஸ்காரம்" (கீர்த்தனை எண். 29, புதிய எண். 65) "ஜீவ வசனம் கூறுவோம்" (கீர்த்தனை பழைய எண். 304. புதிய எண். 407) மற்றும் ஆ இன்ப காலம் அல்லோ ஜெப வேளை (பழைய எண். 239, புதிய எண். 332)
2) அவர் ஆன்மீக பிரசங்கங்கள் எழுதியுள்ளார்.
3) வயலின் போன்ற இசை கருவிகள் மூலமாக ஆலயங்களில் கதாகாலட்சேபம் நடத்தியுள்ளார்.
4) நோயாளிகளை L.M.S. Hospital, நெய்யூர், மருத்துவமனைக்கு அனுப்பி மருத்தவ வசதிபெற உதவியுள்ளார்.
5) மக்கள் மத்தியில் படி நிலை கொண்டுவர கடினமாக உழைத்தார்.
6) Neyyoor Water Irrigation Channal (பேச்சிப்பாறை, குளச்சல், மண்டைக்காடு, கல்லுக்கூட்டம் பகுதி வழியாக) அமைக்க அரும் பாடுபட்டார்.
7) சமுதாயத்தில் மக்கள் இடையே ஏற்படும் பிரச்சனைகள், வழக்குகள், அமைதியான சமரச தீர்வு மூலம் முடித்து வைத்துள்ளார்.

**Late Rev. M. வேதமாணிக்கம்**
பேரப்பிள்ளைகள்
வேம்படி வினை, கல்லுகூட்டம்

# மொழி பெயர்புக்கு - மொழி பெயர்ப்பு

## தமிழ் வேதாகமத்தில் புரியாத வார்த்தைகளின் அர்த்தங்கள்

இதற்கு முன்னும் வேதாகமத்தில் புரியாத வாரத்தைகள் சிறிய அளவில் வாசகர்கள் சிலர் எனக்கு அனுப்பி அதை ஜாமக்காரனில் வெளியிட்டேன். இம்முறை அதிக அளவில் புரியாத பல வார்த்தைகளையும் சரியான பதங்களையும் வெளியிடுகிறேன் இதை தொகுத்து அனுப்பிய சகோதரனையும் பத்திரிகை ஆசிரியரையும் வாழ்த்துகிறேன்.

இந்த புரியாத வார்த்தைகள் திருத்தப்பட்டு சரியான திருத்தப்பட்ட வேதாகமம் வெளிவரும் வரை உங்கள் வேத புஸ்தகத்தில் கீழே உள்ள சரியான பதத்தை குறித்துவைத்துக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அகணிநார் | - நரம்புக் கயிறு. | |
| | நார்க்கயிறு | நியா 16:7 |
| அகத்தியம் | - கட்டாயம், | எஸ்தர் 4:8 |
| அகாதமான | - ஆழமான படுகுழி | ஏசாயா 14:15 |
| அசனம் | - உணவு | 2. சாமு 9:11 |
| அசங்கியம் | - அருவருப்பு | எஸ்றா 9:11 |
| அசுப்பிலே | - திடீரென்று | யோபு 22:10 |
| அசுப்பீம் வீடு | - பண்டக சாலை | 1 நாளா 26:17 |
| அசம்பி | - உடல் | 1 சாமு 21:15 |
| அசறு | - சொறி, சிரங்கு | லேவி 13:2 |
| அசூசம் | - தீட்டு | புலம்பல் 1:9 |
| அளகபாரம் | - கூந்தல் | உன்னத 6:5 |
| அழிம்பு | - அழிவு | எரே 6:7 |
| அர்ப்பிதம் | - புனிதமான | எசே 45:1 |
| அரிபிளவை | - புற்றுநோய் | |
| | தசை அழுகல் | 2 தீமோ 2:17 |
| அவிழ்தம் | - மருந்து | எரே 46:11 |
| அஞ்சிக்கை | - நடுக்கம், அச்சம் | ஓசியா 3:5 |
| அஞ்ஞனம் | - மந்திரவாதம் | உபா 18:10 |
| அப்போஸ்தலர் | - திருத்தூதுவர் | மாற் 6:30 |
| அம்பறாத்தூணி | - அம்புகளை வைக்கும் கூடு சங் 127:6 | |
| அம்பாயம் | - வலி | ஏசாயா 26:17 |
| அம்பாரம் | - பெரும் குவியல் | 2 நாளா 31:10 |
| அநுக்கிரகம் | - கருணை | ஆதி 19:21 |
| அல்லத்தட்டுதல் | - புறக்கணித்தல் | சங். 14:5 |
| அநாதி | - நித்தியமான, முடிவற்ற | உபா. 33:27 |
| அறுதி | - நிரந்தரம் | லேவி 25:23 |
| அறுமீன் | - கார்த்திகை விண் மீன் | யோபு 9:9 |
| அறுமீன் | - கார்த்திகை விண்மீன் | யோபு 6:9 |
| அபரஞ்சிப் பூஷணம் | - பசும்பொன், ஆபரணம் | நீதி 25:12 |
| அமரிக்கை | - அமைதி | ஏசாயா 32:17 |

| | | |
|---|---|---|
| அருக்களிப்பு | - பயமுறுத்துதல் | யோபு 3:5 |
| அயுக்தம் | - அறிவற்ற விவாதம் | 2 தீமோ. 2:23 |
| அமஞ்சிவேலை | - அடிமை வேலை | 1 ராஜா 9:21 |
| அருண்டு | - திடீரென்று | ரூத் 3:8 |
| அடைப்பம் | - பை | 1 சாமு 17:49 |
| அ்பேட்சை | - விருப்பம், எதிர்பார்ப்பு | நீதி 10:28 |
| அயனம் | - கிரகணங்கள் சுற்றும் பாதை | நியா 5:20 |
| அஸ்திராயுதம் | - படைக்கருவி | எரே. 50:25 |
| அஸ்தகடகம் | - கழுத்து பொற் சங்கலிகள் | எசாயா 3:19 |
| அஸ்வங்கள் | - குதிரைகள் | எரே 8:16 |
| அரணிப்பானது | - உறுதியானது | எண் 24:21 |
| அரதேசி | - அகதி, அந்நியர் | 1 நாளா 29:15 |
| அவயங்காத்தல் | - அடை காத்தல் | எரே 17:11 |
| அழுங்கு | - அறனை அகழெலி | லேவி 11:30 |
| அதினம் | - உடைமை | ஆதி 47:19 அப் 1:7 |
| ஆதியோடந்தம் | - தொடக்கமுதல் இறுதிவரை | நாளா 29:29 |
| ஆக்கினை | - தண்டனை | யாத் 21:28 |
| ஆகடியம் | - ஏளனம் | நீதி. 1:27 |
| ஆகாமித்தியம் | - பொல்லாங்கு | சங் 10:5 |
| ஆகாமியம் | - தீயகுணம். தீமை | நீதி 4:17 |
| ஆசாரங்கள் | - மரபுகள், ஒழுங்குகள் | மாற் 7:4 |
| ஆணம் | - கறிக்குழம்பு | எசா 65:4 |
| ஆளோட்டி | - வேலை வாங்கும் அதிகாரி | யாத் 3:7 |
| ஆயுததாரி | - படைக்கலன் தாங்குபவர் | சாமு 16:21 |
| ஆயம் | - வரி | எஸறா 7:24 |
| ஆரங்கள் | - அணிகலன்கள் | யாத் 35 :22 |
| ஆவலாதி | - புகார் பழிச்சொல் | உபா 22:14 |
| இதமியம் | - மகிழ்ச்சி | நியா 18:20 |
| இரத்தாம்பரச் சிவப்பு | - கடுஞ்சிவப்பு | ஏசாயா 1:18 |
| இரண்டகம் | - கலகம். புரட்சி | யோசுவா 22:19 |
| இல்லாழ் | - உரிமை மனைவி | நீதி 30:23 |
| இளக்கரிப்பு | - சோர்வு | ஏசாயா 42:4 |
| இடும்பு | - ஆணவம் | யாத் 18:11 |
| இரட்டைப் புரை | - தடிமனான | நீதி 31:21 |
| இராமாறு | - இரவுக்காவல் | நெகே 4:22 |
| ஈளை | - உருக்கு நோய் | உபா 28:22 |
| ஈனம் | - பழிப்பு | ரூத் 2:15 |
| உக்கிரம் | - கோபக்கனல் | உபா. 9:19 |
| உக்கிரானகாரன் | - மேற்பார்வையாளர் | 1 ராஜா 16:9 |
| உக்கல் | - உளுத்துபோன. கெட்டுப்போன | ஆபகூக் 3:16 |
| உச்சிதங்கள் | - அரும்பொருள்கள் | 2 ராஜா 8:9 |

| | | |
|---|---|---|
| உச்சிதங்கள் | - அன்பளிப்புகள் | ஆதி 24:53 |
| உத்தரித்தல் | - எதிர்த்து நிற்பது | யோபு 31:23 |
| உத்தண்டம் | - கட்டாயபடுத்துதல் | எசேக் 45:9 |
| உத்தரமண்டலம் | - வடபுறம் | யோபு 26:7 |
| உம்பிளிக்கை | - உரிமை சொத்து. | எஸறா 9:12 |
| உசாவுதுணை | - அறிவுரை | யோபு 26:3 |
| உசாவு | - ஆலோசனை | யோபு 26:3 |
| உடுமானம் | - ஆடை | எரே 10:9 |
| உடுமானம் | - உடைகள் | எரே 45:9 |
| உறுமால் | - கைக் குட்டை | அப் 19:12 |
| உளுப்பு | - உளுப்பு பூச்சி | ஓசியா 5:12 |
| உபாதி | - கொள்ளை நோய் | யாத் 32:35 |
| உபாயம் | - தந்திரம். சூழ்ச்சி | யாத் 1:10 |
| உளைவு | - வலி | ஏசா 21:3 |
| உருட்சியான | - தட்டையான | யாத் 16:14 |
| ஊத்தை | - அழுக்கு | செப் 3:1 |
| எத்தனம் | - முயற்சி | அப் 9:29 |
| எரிபந்தம் | - கொப்புளம் | உபா 28:22 |
| எறிவல்லயம் | - எறியும் வில் | யோபு 41:7 |
| ஏங்கல் | - பெரும்மூச்சி | சங் 38:9 |
| ஏபோத்து | - மேல் ஆடை | 1 சாமு 2:18 |
| ஒலிமுக வாசல் | - கோட்டைக் கதவு | ரூத் 4:11 |
| ஒற்த்தலாம் | - புதினா | மத் 23:23 |
| ஓரிகள் | - நரிகள் | ஏசா 13:22 |
| ஒளஷதம் | - மருந்து நீதி | நீதி 16:24 |
| கந்தாயத்து | - முதலில் பழுத்த | எரே 24:2 |
| கறளை | - காட்டுகழுதை | எரே 48:6 |
| கனதி | - தடிம அளவு | 1 சாமு 17:7 |
| கஜானா | - பண்டகச்சாலை | எஸ்தர் 4:7 |
| கரிகறுத்தல் | - துக்கத்தினால் கறுத்துப்போனேன் எரோ 8:21 | |
| கரிய போளம | - வாசனைப் பொருள் | யோவான் 19:39 |
| கலிக்கம் | - மருந்து | வெளி 3:18 |
| கட்டியக்காரன் | - அறிவிக்கும் தூதன் | தானி 3:14 |
| கட்கம் | - வாள் | நீதி 25:18 |
| கந்தவர்க்கங்கள் | - நறுமனப் பொருட்கள் | 1 ராஜா 10:10 |
| கப்புச்சுவர் | - செடியின் குருத்து, தழைகள் | ஏசாயா 18:5 |
| கப்புக்கவர் | - அரிவாள் | ஏசாயா 18:5 |
| கப்பிகள் | - தீவனம் | ஏசா 30:24 |
| கம்மாளா | - கைவினைஞர் | 1 நாளா 29:4 |
| கடாட்சித்தார் | - கண்ணோக்கினார் | யோபு 2:18 |
| காடாட்சம் | - கருணை | உன் 8:10 |

| | | |
|---|---|---|
| கடல் சஞ்சாரி | - கடற்கரை தலைவர்கள் | எசே 26:16 |
| கல் தச்சர் | - கொத்தர் | 1 நாளா 14:1 |
| கணங்கள் | - சிலைகள் | ஏசாயா 57:13 |
| கருக்காய் | - அம்மை நோய் | உபா 28:22 |
| கவுதாரி | - காட்டுக்கோழி | 1 சாமு 26:20 |
| கலாதி | - கலகங்கள் | எஸ்றா 4:15 |
| கழுந்துகள் | - பொறுத்தும் பகுதிகள் | யாத் 26:17 |
| கல்லளை கழலை | - கழிச்சல் நோய் | லேவி 22:22 |
| காணியாட்சி | - நிலப்பகுதி | லேவி 25:10 |
| காடி | - புளிப்பு | சங் 69:21 |
| கிரியிருப்பவர்கள் | - பிணைக்கைதிகள் | 2 ராஜா 14:14 |
| கிர்த்தியங்கள் | - தீய செயல்பாடுகள் | நியா 2:19 |
| கிடாரி | - இளம் பசு | ஆதி 15:9 |
| கிலேசம் | - துயரம் | ரூத் 1:21 |
| கிராதி | - ஜன்னல், பலகணி. பின்னல் தட்டி | 2 ராஜா 1:2 |
| கிரணம் | - ஒளிக்கதிர் | ஆபகூக் 3:4 |
| கூளிகள் | - பருந்துகள் | ஏசாயா 34:15 |
| கூகை | - பருந்து | லேவி 11:16 |
| குச்சு | - சிறிய இடம் | எஸ்றா 9:8 |
| குடாக்கள் | - துறைமுகப் பகுதி | நியா 5:17 |
| குறுணி | - ஒரு மரக்கால் | ஏசாயா 5:10 |
| குவாரிவண்டில் | - மூடுபல்லக்கு | ஏசாயா 66:20 |
| குவாரவண்டில் | - பல்லக்குகள் | ஏசாயா 66:20 |
| கடுக்கண் | - காதணி | நியா 8:24 |
| காங்கை | - வெயில் | ஏசாயா 25:5 |
| கர்த்தத்துவம் | - ஆட்சி | தாணி 4:22 |
| காய்மாகாகரம் | - பொறாமைக்கண் | 1 சாமு 18:9 |
| காளவாய் | - சூளை | உபா 4:20 |
| கெடி | - திகில், அச்சம் பயங்கரம் | தானி. 7:7 |
| கைத்தாய் | - செவிலித்தாய் | ஏசாயா 49:23 |
| கொடிமாசி | - மேகம் | யோபு 38:37 |
| கோரி | - சமாதி | யோபு 21:32 |
| கோளிகை கழுதை | - பெண் கழுதை | ஆதி 12:16 |
| கொண்டல் காற்று | - கீழ் காற்று | யோபு 15:2 |
| கொம்மை | - காவல் கோபுரம் | நெகே 3:1 |
| கொம்மை | - காம்பு பிடிகள் | 1 ராஜா 7:34 |
| கொறுக்கை | - கோரைபுல் | ஏசாயா 19:6 |
| கொளுவகிறான் | - உருவாக்குகிறான் | நீதி 29:22 |
| கோராவாரி | - சூறாவளி | எரே 30:23 |
| கெவுனி | - மதில்சுவர் | 2 சாமு 18:24 |
| சதி சற்பனை | - கைவினைச் செயல் | எசாயா 25:11 |

| | | |
|---|---|---|
| சக்கந்தம் | - ஏளனம் | நெகே 4:1 |
| சக்கராகாரம் | - வளைவான விழிம்பு, வட்ட வடிவம் | நாளா 4:2 |
| சப்பரம் | - தேர், பல்லக்கு | ஆமோஸ் 5:26 |
| சம்பிரதி | - நகர ஆணையர், செயலர், எழுத்தர் | அபோ 19:35 |
| சம்பாஷணை | - உரையாடல் | லூக்கா 9:30 |
| சம்பாரம் | - நறுமணப் பொருள் | எசே 24:10 |
| சர்ப்பணை | - சதி சூழ்ச்சி | அப் 23:30 |
| சல்லடங்கள் | - கால் சட்டைகள் | யாத் 39:28 |
| சன்னது | - ஆவணம் | எஸ்றா 7:11 |
| சன்னதக்காரன் | - சூன்யம் செய்பவர் | உபா 18:11 |
| சன்னந்தர் | - போர்வீரன் | யோபு 15:24 |
| சன்னது | -ஆவண மடல் | எஸ்ரா 8:36 |
| சன்னதம் | - திருவுளம் | 2 ராஜா 16:15 |
| சமஸ்த | - அனைத்து | எண் 1:50 |
| சருவம் | - அண்டா | 1 சாமு 2:14 |
| சரப்பணி | - தங்கச்சங்கிலி | நியா 8:26 |
| சவக்கரணை | - அரசியல் குற்ற மன்னிப்பு | எஸ்தர் 2:18 |
| சாக்குருவி | - ஆந்தை | எசாயா 34:14 |
| சாமாசி | - மத்தியஸ்தன் | யோபு 33:23 |
| சாலகம் | - கால்வாய் வாய்கால் | 2 ராஜா 20:20 |
| சாவதானம் | - கவனம் | 2 நாளா 33:8 |
| சாங்கோபாகம் | - பாதுகாப்.நலம் | யோபு 12:6 |
| சாந்துக்காறை | - இளம்பிறை அணிகலன் | நியா 8:21 |
| சாமக்கட்டண்டை | - காவல்மேடு | 2 நாளா 20:24 |
| சித்திக்காது | - வெற்றியடையாது | 2 நாளா 3:12 |
| சிரபூஷணம் | - தலை அணிகலன்கள் | ஏசாயா 3:20 |
| சீதளம் | - குளிர் | ஆதி 8:22 |
| சுட்டிகள் | - நெற்றி அணிகலன்கள் | ஏசாயா 3:18 |
| சுமுத்திரையான | - சரியான அளவுள்ள | லேவி 19:36 |
| சூநீரம், சூதகம் | - மாதவிலக்கு | லேவி 21:10 18:19 |
| சுயாதீனம் | - தன்னுரிமை | 1 கொரி 10:29 |
| சோர்வைக்காரர் | - படைத்தலைவர் | 2 ராஜா 10:25 |
| சேஷ்ட புத்திரபாகம் | - தலைமகன் உரிமை | ஆதி 25:32 |
| சோர மார்க்கமாய் | - கள்ளத்தனமான | லேவி 17:7 |
| சிரங்கை | - கைப்பிடி அளவு | எசே 13:19 |
| சீரிஷம் | - மார்கழி விண்மீன் | யோபு 38:31 |
| ஜல்லடம் | - சல்லடை | ஆமோஸ் 9:9 |
| ஜலப்பிரளயம் | - வெள்ளப்பெருக்கு | ஆதி 10:32 |
| ஜனச தளங்கள் | - மக்களினங்கள் | 2 நாளா 7:20 |
| ஜாதிலிங்க வர்ணம் | - செவ்வண்ணம் | எரே 22:13 |
| ஜாதி | - இனம் | ஆதி 1:11 |

| | | |
|---|---|---|
| ஜீவித்துபோய் | - உயிர் நீத்து | ஆதி 49:33 |
| ஸ்திதி | - அந்தஸ்து | எஸ்தர் 2:18 |
| தகசுதோல் | - வெள்ளாட்டு தோல் | யாத் 25:5 |
| தத்தமாக | - பரிசாக | எண் 18:6 |
| தஸ்திர அறை | - பத்திர அறை | எஸ்ரா 6:1 |
| தர்ப்பணம் | - கண்ணாடி | யாத் 38:8 |
| தவணம் | - தாகம் | 2 சாமு 17:29 |
| தண்டுகள் | - படைப்பிரிவுகள். கொள்ளைக்கூட்டத்தினர் | 2 ராஜா 13:20 |
| தள வரிசை | - நடை மேடை | எசே 42:3 |
| துரோகிருதன் | - தீச்செயல் புரிபவன் | சாமு 25:3 |
| துலக்கம் | - பளபளக்கும் - | ஏசா 49:2 |
| தகசு | - வெள்ளாடு | யாத் 25:5 |
| தாளடி | - வைக்கோல் | யாத் 5:12 யோபு 39:21 |
| தாணையம் | - படைத்தளம் | 2 சாமு 23:14 |
| | எல்லைக்காவல் | 1 சாமு 10:5 |
| தழுவனை | - காப்புக்கயிறு | எசே 13:18 |
| தாற்பரியம் | - உட்பொருள் | பிர 8:11 |
| திரணை | - தோரணம் | யாத் 25:24 |
| தர்ப்பணம் | -கண்ணாடி | யாத் 38.8 |
| திரவிய சம்பன்னன் | - செல்வந்தன் | பிரா 2:9 |
| திரிகை | - மாவரைக்கும் கல் | உபா 24:6 |
| துரிஞ்சில் | - வௌவால் | ஏசா 2:21 |
| துர்சனப்பிரவாகம் | - அழிவின் சூழல்கள் | 2 சாமு 22:5 |
| துரிசாய் | - விரைவாக | எஸ்றா 5:8 |
| துருத்தி | - தோல் பை | ஆதி 21:14 |
| துரைத்தனம் | - அதிகாரம், ஆதிக்கம் | ஆதி 37:8 |
| துன்னாள் | - துன்பப்பட்டவன் | யோபு 30:25 |
| துண்டரிக்காரன் | - கொடூரக்காரன் | தானி 11:14 |
| துபாசி | - மொழிபெயர்பாளர் | ஆதி 42:23 |
| தூபாஸ்தம்பம் | - புகைத்தூன் | உன் 3:6 |
| தூலம் | - இருப்புக்கோல் | ஏசாயா 28:27 |
| தொழுங்கு | - குலை | 2 பாட்டு 7:7 |
| தொந்தம் | - நெருங்கிய உள்ளன்பு | நீதி 18:24 |
| தெற்றுகள் | - பாசறை | ஏசா 29:3 |
| நடைக்காவணங்கள் | - கூந்தலின் சுருள்கள் | உன் 7:5 |
| நமூடு | - நாரை, சிட்டுக்குருவி | ஏசாயா 38:14 |
| நாற்சாரி | - நான்கு திசைகள் | 2 ராஜா 10:21 |
| நலவு | - நயந்து பேசு | நியா 19:3 |
| நாச்சியார் | - உரிமை மனைவி | நீதி 30:23 |
| நிக்கிரகம் | - அழிவு | ஏசாயா 54:16 |

நிசார் - உள்ளாடை தானி 3:21
நிபச்சொல் - பொல்லாத வார்த்தை ஏசாயா 58:9
நிருபம் - கடிதம் அப் 15:21
நிறைபாரம் - அதிக பாரம் ஆமோஸ் 2:13
நிஜஸ்தர் - நேர்மையாளர் ஆதி 42:11
நியாய பிரமாணிக்கன் - அரசுரிமை உடையவர் ஆதி 49:10
நிமித்தம் - சகுனம் எசே 21:21
நிர்த்தூளி - தகர்த்து லேவி 26:30

நிசார் - உள்ளாடை தானி 3:21
நிபச்சொல் - பொல்லாத வார்த்தை ஏசாயா 58:9
நிருபம் - கடிதம் அப் 15:21
நிறைபாரம் - அதிக பாரம் ஆமோஸ் 2:13
நிஜஸ்தர் - நேர்மையாளர் ஆதி 42:11
நியாய பிரமாணிக்கன் - அரசுரிமை உடையவர் ஆதி 49:10
நிமித்தம் - சகுனம் எசே 21:21
நிர்த்தூளி - தகர்த்து லேவி 26:30

நெடித்தாங்கி - தாழப்பணிந்து சாமு 28:209
நேரஸ்தர் - குற்றமற்றவர் 2 நாளா 19:10
நொதித்தல் - சீழ் வடையும் புண்கள் ஏசாயா 1:6
பகுதி கட்டுதல் - கப்பம் கட்டுதல், தீர்வை கட்டுதல் நீதி 12:24 எஸ்தர் 10:1
பயில்காட்டல் - சீழ்க்கை ஒலியால் அழைப்பது ஏசாய 5:26
பரிகாரி - குணமளிப்பவர் யாத் 15:26
பரிசாரகி - பாதுகாப்பாளன் அப் 19:35
பரஸ்தீரி - விலைமாது நியா 11:1
பருக்கைக்கல் - சரளைக்கல் நீதி 20:17
பலச்சயம் - சோர்வு, பலவீனம் எரே 8:18
பறைமுறை - ஆணை பிறப்பித்தல் 1 ராஜா 15:22
பரிச்சேதம் - நிச்சயமாக எரே 6:15
பரிசை - கேடயம் 1 சாமு 17:7
பவிஞ்சு - கூட்டம், பிரிவு உன் 1:9 யோபு 1:17
பண்டம் பாடி - பொருள்கள் யோசுவா 7:11
பணையம் - ஈட்டுத்தொகை ஓசியா 2:12
பலக்கப்பண்ணினார் - வலிமையடையச்செய்தார் நியா 3:12
பிச்சு - பித்த நீர் யோபு 16:33
பிரபை - தெளிவு யாத் 24:10
பிராது - முறையீடு 1 தீமோ 5:19
பிறைச்சித்தாக்கு - இளம்பிறை அணிகலன் நியா 8:26
பிகெமோத் - பெரிய விலங்கு யோபு 40:15
புல்வாய் - கருப்பு மான் உபா 14:5
பெத்தரிக்கம் - இறுமாப்பு, புகழ். பெருமை எரே 48:2
பொலிசை - அதிக வட்டிபணம் எசே 18:8

| | | |
|---|---|---|
| பேடு | - பெண் | அதி 7:3 |
| பேர்டாப்பு | - பெயர்பட்டியல் | 2 நாளா 23:24 |
| போதிகை | - மேல்தளம் | ஆமோஸ் 9:1 |
| மச்சு | - மாடி | ஆகாய் 1:4 |
| மரைக்குட்டி | - இளம் ஆண்மான் | உன் .2:9 |
| மினக்கேடு | - முடங்கிவிடும் | நெகே 8:15 |
| மிலாறு | - கோல், தண்டனை | 2 சாமு 7:14 |
| முக்காரம் | - கனைத்தல் | எரே 50:11 |
| முள்துறடு | - அள்ளு கருவிகள் | 1 நாளா 28:17 |
| முகாந்தரம் | - காரணம் | எஸ்தர் 4:15 |
| முதிராப்பிண்டம் | - செத்துப்பிறந்த குழந்தை, வளர்ச்சியடையாத கரு | யோபு 3:16 |
| ராஜாளி | - கழுகு | லேவி 11:19 |
| லபியாது | - கிடைக்காது | 2 நாளா 26:18 |
| லிவியாதான் | - பெரிய கடல் உயிரினம் | யோபு 3:8 |
| ரஸ்துக்கள் | - பயண மூட்டைகள் | ஏசா 10:28 |
| யஸ்பி | - வண்ணக்கல் | யாத் 28:20 |
| யுத்தசந்நத்தர் | - போருக்கு தயாரானவர்கள் | யோசுவா 6:7 |
| விருத்தாப்பியம் | - முதிர்வயது | ஆதி 5:28 |
| வாச்சி | - உளி | 1 ராஜா 6:7 |
| வலசை வாங்குதல் | - ஓட்டம் | ஏசாயா 10:31 |
| வசனிப்பு | - சொல்லலாங்கார வார்த்தைகள் | மத் 6:7 |
| வர்த்தமானங்கள் | - நிகழ்ச்சிகள், செயல்கள் | 1 ராஜா 15:7 |
| வலுசர்ப்பம் | - பெரிய பாம்பு, அரக்கப்பாம்பு | எரே 5:34 |
| வாது | - சண்டை | நீதி 13:10 |
| விஸ்தீரணம் | - அகன்ற | எரே 51:58 |
| வியார்த்தி | - விளக்கம் | தானி5:12 |
| விக்கினங்கள் | - ஆபத்துக்கள். துன்பங்கள் | சங் 57:1 |
| வல்லடிக்காரர் | - கொடுமைக்காரர் | யோபு 6:23 |
| வல்லயங்கள் | - ஈட்டிகள் | 2 சாமு 8:17 |
| வெளிமான் | - பெண் மான் | உபா 12:15 |
| வேக்காடு | - தீக்காயம் | லேவி 13:24 |
| வெள்ளாட்டிகள் | - அடிமைப்பெண்கள் | எஸ்தர் 7:4 |
| வியாச்சி | - வழக்கு | யாத் 23:6 |
| வாலவயது | - இளமை | சங் 103 :5 |
| வம்சபதி | - குலத்தலைவர் | உபா 1:15 |
| விதானிந்திருந்தது | - பிணைக்கப்பட்டிருந்தது | 1:6 |
| வியாஜ்யம் | - வழக்கு | யாத் 23:16 |

தொகுப்பு :
சௌராஷ்ட்ர பைபிள் மொழி பெயர்ப்பாளர் & ஜாமக்காரன் வாசகர்

# TRICHY FMPB SCAN கூட்டங்கள்

**திருச்சி** பிஷப்.ஹிபர் கல்லூரியின் பெரிய மண்டபத்தில் 2016 செப்டம்பர மாதம் நடந்த இந்த கூட்டத்தில் மிகத்திரளான விசுவாசிகள் கலந்துக்கொண்டனர்.





இந்த FMPB கூடுகையில் குறிப்பாக **அசாம் ஆதிவாசிகள்** இயேசுவை குல தெய்வமாக ஏற்றுக்கொண்டபின் அவர்களின் **பாஷையிலேயே** கிறிஸ்தவ பாடல்களை இயற்றி தங்கள் ஆராதனையில் பாடி ஆராதிக்கின்றனர். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை குடி போதைக்கு அடிமைப்பட்ட குடும்பம் இன்று இயேசுவை ஏற்றுக்கொண்டதால் அவர்கள் யாவரும் தாங்கள் குடியிலிருந்து விடுதலை பெற்றதை சாட்சியாக அறிவித்தாரகள். சாட்சிகூறிய அந்த குடும்பங்களையும் அந்த வைராக்கிய குடும்பத்தின் சாட்சியை நேரில் கேட்டபோது நானும் தேவனை துதித்தேன் அவர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளாதபோது அந்த ஆதிவாசிகளின் **வாழ்க்கையை** எப்படியிருந்தது என்பதை காண்பிக்க அவர்களின் கலாச்சார உடைகளை அனிந்து அவர்களே நடித்து காட்டியது மக்களை வெகுவாக கவர்ந்தன.

FMPB பொருப்பாளர்கள் மிஷனரி பணித்தள செய்திகளை அறிவித்துமுடிந்தபின் Dr. புஷ்பராஜ் ஆகிய நான் பேசவேண்டிய நேரம் வந்தது. கூட்ட ஏற்பாடு செய்தவர்கள் அண்ணே, நீங்கள் பிரசங்கம் செய்ய நீண்டநேரம் எடுத்துக்கொள்ளலாம் என்று என்னை உற்சாகப்படுத்தினர். கர்த்தரும் என்னை கிருபையாக உபயோகித்தார். செய்தி மக்களை மிகவும் அசைத்தது. பலர் புது தீர்மானங்கள் எடுத்தனர். **அசாமில்** மரத்தின் அடியில் ஆராதிக்கும் மக்களுக்கு நான்கு கிராமங்களில் ஆலயம் கட்டிக்கொடுக்க **20 கோடிகள்** தேவை என்பதை அறிவித்தார்கள். Rev. கோயில்ராஜ் அவர்கள் கொடுத்த தெளிவான புள்ளிவிவரங்கள் பலரின் உள்ளத்தில் தீர்மானம் செய்ய உதவியது. கூட்டம் முடியும் முன்பாகவே **8 கோடிகள்** கொடுக்க விசுவாசிகளில் பலர் உடனே முன்வந்தனர். கூட்டம் மிக ஆசீர்வாதமாக அமைந்தது.

**திருச்சி** நகரில் உள்ள FMPB ஜெபகுழுக்களை பற்றிய விசேஷம் என்னவென்றால் FMPB தொடங்கப்பட்ட **ஆரம்ப நாட்களிலேயே முதல் மிஷனரியை** தாங்க இந்த ஜெப குழுவினர் முன் வந்தது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டிலேயே மிஷனரியை தாங்கவேண்டும் என்ற முதல் தீர்மானத்தை **திருச்சி** FMPB ஜெபகுழுக்களதான் **முதல் தீர்மானம்** எடுத்தார்கள் என்பது சரித்திரத்தில் பதிய வேண்டிய விஷயம். இந்த சரித்திர நிகழ்ச்சியை சுட்டிக்காட்டி பழைய சம்பவங்களை ஞாபகப்படுத்தி **திருச்சி ஜெபகுழுவினரை** நான் என் பிரசங்கத்தில் பாராட்டிய உடனே அரங்கமே அதிர பலர் கைகளை தட்டி தங்கள் சந்தோஷத்தை தெரியப்படுத்தினர். அதிலும் சிறப்பாக FMPBயின் **முதல் மிஷனரியான** சகோ.**ஹாரிஸ்ஹில்டன் அவர்களின் குடும்பத்தை** முதல் மிஷனரிகுடும்பமாக பிரதிஷ்டை செய்து அவர்களை தாங்கும் முழு பொறுப்பெடுத்ததும் அந்த நல்ல விஷயத்தில் FMPB ஜெபக்குழுக்களில் இந்தியா அனைத்திலும் முன்னிலை வகித்ததும் **திருச்சி ஜெபக்குழுவினர்தான்** என்பது சரித்திரத்தில் எழுதப்படவேண்டிய மற்றொரு முக்கிய விவரமாகும் என்றும் அறிவித்தேன். கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது. திருச்சி FMPB அனைத்து ஜெபகுழுவினரையும் வாழ்த்துகிறேன்.

# ஒரு பகல் உபவாசம்

ஜெப நாள் :
**2017 மார்ச் 14**

கேன்சர் வியாதி உலகெங்கும் குறிப்பாக இந்தியாவில் மிக அதிகமாக பறவி பல குடும்பங்களில் பெரும் பாதிப்பையையும் மனவேதனையும் உண்டாக்கிக்கொண்டிருக்கிறது. அதற்கென்று விஷேச ஜெபம் ஏறெடுக்க பல வாசகர்கள் சில மாதங்களாகவே என்னிடம் அறிவித்து வருகின்றனர்.

அகவே 2017 மார்ச் மாதம் 14ம் தேதி ஒரு பகல் உபவாச ஜெபம் ஏறெடுக்கப்படுகிறது. இடம்: YFC ஹால், சேலம-636008, இந்தியா. ஜெப விண்ணப்பம் அனுப்ப விரும்புகிறவர்கள், சேலத்தில் உள்ள என் விலாசத்துக்கே கடிதம் மூலமாகவோ,e-mail மூலமாகவோ எழுதி அனுப்பலாம். **தொலைபேசி வழியாக அறிவிக்கவேண்டாம்.** தொலைபேசி மூலம் அறிவிக்கும் ஜெபகுறிப்புகளை எழுதிவைக்க **ஆள் வசதி இல்லை.** ஆகவே கடிதம் மூலம் ஜெபகுறிப்புகளை அனுப்பலாம். மற்ற வியாதிகளுக்கும் குடும்ப பிரச்சனைகளுக்கும் அதே நாளில் ஜெபம் ஏறெடுக்கப்படும். அனுப்பும் ஜெப குறிப்புகளுக்கு **பதில் எழுத இயலாது** என்பதையும் அறிவிக்கிறேன்.

ஜெப குறிப்பு அனுப்புகிறவர்களும் அதே நாளில் அதே தேதியில் என்னோடு இனைந்து ஜெபித்தால் நல்ல பலன் கிடைக்கும். (ஜெபிப்பதற்கு காணிக்கை ஏதும் அனுப்பவேண்டாம்.)

**FEBRUARY 2017**

# Printed Book/Book Post


**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**


**Return Requested:**


**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**